■ ஹிஜ்ரி 1438 ■ ஜ.அவ்வல் பிறை 15 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 025

2017 பெப்ரவரி 13
திங்கள்
விலை: 20/-

NAVAMANI DAILY
நவமணி දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017






நல்லாட்சியில் மெல்ல தலைதூக்கும் ஊடக அடக்குமுறை

04»

முதலிடத்தில் தாஹிர்

12»

# தவிசாளர் இன்றி நடந்த மு.கா. பேராளர் மாநாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் நிலவி வரும் பதவி சர்ச்சைகள் தொடரும் நிலையில் கட்சியின் தவிசாளர் பதவி நிரப்பப்படாது கட்சியின் 27ஆவது பேராளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

முழு நாட்டினதும் அவதானத்தை ஈர்த்த பேராளர் மாநாடு நேற்றுக்காலை பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பலத்த பாதுகாப்பு

11 »»»»»





## மீள்குடியேற்ற செயலணிக்கு ஜனாதிபதி தலைமை



வடக்கில் வெளியேற்றப்பட்டவர்களை மீள்குடியேற்றுவதற்காக நியமிக்கப்பட்டு இயங்கிவரும் செயலணியின் தலைமைப் பொறுப்பினை ஜனாதிபதி ஏற்றுள்ளார்.

குறிப்பிட்ட செயலணியில் தனக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென அமைச்சர் றவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்ததையடுத்தே

11 »»»»»

## தலைமைத்துவம் நேர்மையாக மாறும் என்றால் தட்டில் வைத்து தாரைவார்த்து கொடுப்பதற்கு தயார்

■ பிறவ்ஸ் முஹம்மட்

கடந்த 16 வருடங்களாக நான் தலைமைத்துவம் எனும் முட்கிரிடத்தை தலையில் சுமந்துவருகிறேன். இந்த தலைமைத்துவம் நேர்மையாக, சட்டபூர்வமாக மாறுமென்றால், எனது பதவியை தட்டில் வைத்து தாரைவார்த்துக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே

11 »»»»»

## பிரதமரின் அமைச்சின் பதில் அமைச்சராக அகில விராஜ்



பிரதமரின் கீழுள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் பதில் அமைச்சராக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா செல்லும் பிரதமர் நாடு திரும்பும் வரை இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நான்கு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு

11 »»»»»

## தம்புள்ளையில் முஸ்லிம் கடைகள் மூடப்பட்டதற்கு பொலிஸாரின் அசிரத்தை காரணமா?

■ வஹக்கோட்டை ஏ. ஸீ.ஏ. முனாஸ்

தம்புள்ளை நகரில் 'பேகர்பன்' விவகாரத்தின் போது தொடராக மூன்று நாட்கள் முஸ்லிம் கடைகள் மூடப்பட்டதற்கு பொலிஸாரின் அசிரத்தையே காரணம் என மாத்தளை சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் சங்கத்தின் தலைவரும் தம்புள்ளைப் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினருமான என். வை. எம். சலீம்தீன் தெரிவித்தார்.தம்புள்ளை சம்பவம் குறித்து நவமணிக்கு அளித்த பேட்டியிலே அவர் இதனைத்

11 »»»»»



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கடந்த இரு தினங்களாக கிண்ணியா மற்றும் மூதூர் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து, மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்தார். இதன்போது மக்கள் அவரைச் சூழ்ந்து வரவேற்றதைப் படத்தில் காணலாம். எம்.பி. அப்துல்லாஹ் மஹ்ரூபும் படத்தில் காணப்படுகிறார்.

## மேல் நீதிமன்ற நீதிபதியாக மனாபின் இடத்திற்கு கன்னன் நியமனம்

### நீதித்துறையில் எதிர்ப்பு

மேல்நிதிமன்ற நீதியரசராக சட்டத்தரணியான ராமநாதன் கண்ணன் என்பவரை நியமித்தது குறித்து நீதித்துறையில் பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவை மூப்பு அடிப்படையில் அடுத்து இப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டிய வவுனியா மாவட்ட நீதிவான் டி.எல்.எப். மனாவினை நியமிப்பதற்குப் பதிலாகவே

11 »»»»»

## தவிசாளர் பதவியை ஏற்காது ஹசனலி வெளிநடப்பு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டாய உயர்பீடக் கூட்டம் சனியன்று இரவு நடைபெற்ற போது கட்சியின் தவிசாளராக முன்னாள் பொதுச் செயலாளர் எம். ரீ. ஹஸன் அலியை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

அதிகாரமிகு பொதுச் செயலாளர் பதவியை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டதனையடுத்தே தவிசாளர் பதவியை ஏற்பதற்கு

11 »»»»»

## மு.கா. செயலாளராக மன்சூர் ஏ. காதர்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய செயலாளராக மன்சூர் ஏ. காதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தாருஸ்ஸலாமில் நடைபெற்ற கட்சியின் கட்டாய உயர்பீடக் கூட்டத்திலே இவர் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் கடைசியாக கட்சியின் உயர்பீடத்தின் செயலாளர் பதவியை வகித்தார்.

ரஜரட்ட பல்கலைக் கழகத்தில் பதிவாளராக இருந்து ஓய்வு

11 »»»»»

## ஹஜ்ஜுக்கு செல்வோர் தடுப்பூசி ஏற்றுவது கட்டாயம்

■ ஆதில் அலி சப்ரி



ஹஜ் கடமைகளை நிறைவேற்றச் செல்லும் யாத்திரிகர்கள் மூளைக் காய்ச்சலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தடுப்பூசி ஏற்றிக் கொள்வதை கட்டாயப்படுத்துவது தொடர்பில் முஸ்லிம் சமய கலாசார அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார

11 »»»»»

## இஸ்ரேலின் சட்ட விரோத குடியிருப்பு சூத்திரதாரி இலங்கையில்



இஸ்ரேலின் பிரபல கட்டடக் கலை நிபுணர் மோசே சப்டி, இவ் வாரம் இலங்கை வரவுள்ளார். இலங்கையில் நடைபெறும், இலங்கை கட்டடக் கலை நிபுணர் நிறுவனத்தின் வருடாந்த நிகழ்வின் பிரதம அதிதியாகவே இவர் இலங்கை வருகிறார்.

இவரின் கட்டடக் கலை நிறுவனம், பலஸ்தீனர்களின் காணிகளில் சட்டவிரோதமாக இஸ்ரேலிய அரச குடியேற்றங்களை அமைக்கும் ஒரு நிறுவனம் என்பதோடு, கொழும்பிலும் இவரது நிறுவனமொன்று கட்டடப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

11 »»»»»

# சமூகப்பிரச்சினைகளை தீர்ப்பதில் மு.கா. தவறிழைத்துவிட்டது

## தம்பளகாமத்தில் அமீர் அலி குற்றச்சாட்டு




(சுஐப் எம். காசிம்)

முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அஷ்ரபினால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தமக்குள் குடுமிச்சண்டைகளில் ஈடுபட்டுவருவதனால் சமூக உரிமைகளை மறந்து வாழாவிருப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தவிசாளர், பிரதி அமைச்சர் அமீர் அலி குற்றஞ்சாட்டினார்.

தம்பலகாமம் அல் ஹிக்மா கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் காங்கிரசின் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் பிரதி அமைச்சர் அமீர் அலி உரையாற்றினார். கட்சியின் தலைவர், அமைச்சர் றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கூட்டத்தில் அமீர் அலி கூறியதாவது,

முஸ்லிம் காங்கிரஸ் மர்ஹூம் அஷ்ரபின் மறைவோடு முடிந்து விட்டது. அந்தக் கட்சிக்குள்ளே ஏகப்பட்ட பிரச்சினைகள், பல்வேறு நெருக்கடிகள் தலைவிரித்தாடுகின்றன. தலைவரிலே பிரச்சினை செயலாளரிலே பிரச்சினை, தவிசாளரிலே பிரச்சினை - அடிதடி நடக்குமளவுக்கு பிரச்சினைகள் பூதாகரமாக கிளம்பியிருக்கின்றன. சமூகக்கட்சி என்ற நிலையில் இருந்து அந்தக் கட்சி சண்டைக் கட்சியாக மாறிவிட்டது. மர்ஹூம் அஷ்ரபோடு இணைந்து அந்தக் கட்சியை நாங்கள் தூக்கிப்பிடித்தவர்கள். தற்போது சமூகத்தைப் பற்றி சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லாத நிலை வந்துவிட்டது.

தாருஸ்ஸலாம் எனப்படும் சுமார் 150 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பிரமாண்டமான கட்டிடத்தின் வாடகையை எடுத்துக் கொண்டு அவர்களின் ஒருசில முன்னணித் தலைவர்கள் தமது சொந்தப் பெயரில் அதனை எழுதிவிட்டார்கள். இத்தனை பேர் சேர்ந்து வளர்த்தெடுத்த ஒரு கட்சியின் பாரிய சொத்தினை முஸ்லிம் காங்கிரசின் ஒருசிலருக்கு இனாமாகக் கொடுத்துவிட்டு விழி பிதுங்கி நிற்கும் மடமையுள்ளவர்களாக இருக்கின்றோம்.

இன்று முஸ்லிம் சமூகம் எண்ணற்ற சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. மத்ரஸாக்களிலும் பள்ளிவாயல்களிலும் எமக்கு பல பிரச்சினைகள், அது போல காணிப்பிரச்சினை, வில்பத்துப் பிரச்சினை நீகவாபி பிரச்சினை, மேய்ச்சல் தரைப் பிரச்சினை என்று எண்ணற்ற பிரச்சினைகள் இவற்றப் பற்றி அவர்கள் பேசுவதாக இல்லை.

கட்சியென்பது கிப்லா அல்ல, குர்ஆனுமல்ல, மார்க்கமுமல்ல. அது ஓர் இயக்கம், நமக்கு தேவையான விடயத்தை பெற்றுத் தருகின்ற ஒரு சங்கம். அந்த சங்கத்திலே நீங்கள் எல்லோரும் இருக்கிறீர்கள் அந்த இயக்கம் நமக்கான வேலைத்திட்டத்தை எங்களுக்கு செய்து தராவிட்டால், அதிலிருக்கும் தலைவரை நீங்கள் நம்பக்கூடாது. அதனை விட்டு வேறு சங்கத்துக்கு செல்ல வேண்டும். மக்கள் காங்கிரசுக்கும் இது பொருத்தமானதே.

முஸ்லிம்களின் நலன்காக்கும் சங்கமெனக் கருதப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ், கடந்த காலங்களில் நமது பிரச்சினைகளை தீர்க்கத் தவறிவிட்டது. அவர்கள் அந்தப்பிரச்சினைகளை தீர்க்க தயாராகவுமில்லை. அவர்களுடைய கவனமும், கரிசனையும், தங்களை வளர்ப்பதிலேயே குறியாக இருக்கின்றது. நாரே தக்பீர் என்று சொல்லி ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பின்னர் ஆதவன் எழுந்து வரப் போகின்றான் என்று கூறியபோது அவர்களை நம்பினோம். ஏமாந்தோம். இந்த நிலவரத்தை மாற்றுவதற்காகவே நாங்கள் கட்சியை உருவாக்கினோம்.

எமது தலைமை நீங்கள் எதிர்பார்ப்பதைவிட ஒருபடி மேலே சென்று ஓடோடி வருகின்றது. உங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு முண்டியடித்துச் செல்கின்றது.

தம்புள்ளைப் பிரச்சினை தொடக்கம் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு எமது தலைமையே முன்னின்று செயற்படுகின்றது. சகோதர இனங்கள் கூட இதனை ஏற்றுக் கொள்கின்றனர். சமுதாயத்துக்கு பாடுபடுவதற்காக இந்தத் தலைமையை கொள்ளி போட்டு கொத்துகிறார்கள்.

முஸ்லிம்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க பாடுபடுவதனாலும் துரத்தப்பட்ட மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்க போராடுவதனாலேயுமே இந்தத் தலைமைக்கு இத்தனை நெருக்கடிகள். பெரும்பான்மை சமூகத்திலுள்ள இனவாதிகள் இந்த றிஷாட் பதியுதீனை இனவாதியாக இதனால்தான் சித்தரிக்க முனைகிறார்கள்.

இந்தக் காலகட்டத்திலே இந்தப் பிராந்தியத்தில் இருக்கும் நீங்கள் அப்துல்லாஹ் மஹ்ரூப் போன்ற கோலோச்சிய தலைவர்களுடன் இணைந்து எமது கட்சியையும், எமது தலைமையையும் பலப்படுத்த வேண்டும். நாங்கள் தன்மானத்துடனும், கௌரவத்துடனும் வளமாக வாழ்வதற்கு இந்தத் தலைமைக்கு நீங்கள் வலுச்சேர்க்க வேண்டும். அதன் மூலமே உங்களின் குறைகளை இலகுவில் நிவர்த்திக்க முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன் என்று பிரதி அமைச்சர் கூறினார்.

## கலாபூஷண விருது பெற்றார்



நிந்தவூர் 13ஆம் பிரிவைச் சேர்ந்த எம். ரீ.அப்துல் கபூர் அண்மையில் 'கலாபூஷண' அரச விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் அம்பாறை மாவட்ட இஸ்லாமிய இளைஞர் சமூக நலப் பேரவையின் ஸ்தாபத் தலைவராகவும், சிரேஷ்ட பிரஜைகள் சம்மேளனத்தின் கௌரவச் செயலாளராகவும் இருந்து வரும் எம். ரீ.ஏ. கபூர், சிரேஷ்ட ஊடகவியலாளரும் சமாதான நீதவானுமாவார்.

இவரது நீண்ட கால சமூக நல சேவைகள், சமாதான முயற்சிகள் மற்றும் இன ஒற்றுமையோடு ஊடகத்துறைக்கு இவர் ஆற்றிவரும் பங்களிப்பைப் பாராட்டு முகமாக சமூக நிலா , சமூக ஜோதி, சாமஸ்ரீ தேச சக்தி, ரத்தின தீபம், தேசாபிமானி ஊடக பூஷணம் போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனை ஹூதாப் பள்ளியில் விசேட மார்க்க சொற்பொழிவு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

ஹூதா அழைப்பு வழிகாட்டல் பணியகத்தின் ஏற்பாட்டில், 'விசேட மார்க்க சொற்பொழிவு' நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 தொடக்கம் இரவு 9.45 வரை கல்முனை ஹூதா ஜும்ஆப் பள்ளிவாசலில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரபல மார்க்க சொற்பொழிவாளர்களான அஷ்ஷேஹ் சாபித் (ஷரயி), அஷ்ஷேஹ் அப்துல் கனி (ஹாமி), அஷ்ஷேஹ் அப்துல் ஹமீட் (ஷரயீ), அஷ்ஷேஹ் முர்ஷித் (அப்பாஸி) ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இதில் பெண்களுக்கும் விஷேட இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால், உரிய நேரத்திற்கு குடும்ப சகிதம் அனைத்து ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுக்கின்றனர்.

# வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாக். உதவி




வரட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் பாகிஸ்தானிய அரசாங்கம் 25 மெட்ரிக் தொன் அரிசி அடங்கிய நிவாரணப் பொருட்களை விமானம் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைத்துள்ளது.

அந் நிவாரணப்பொதிகள் இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓ) சையத் ஷகில் ஹூஸைன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர். எஸ். மியன் வெல்லவிடம் கொழும்பில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் பாகிஸ்தான் இலங்கை மக்களுக்கு உதவிசெய்யக்கூடிய எச்சந்தர்ப்பத்தினையும் கைவிடாது எனவும், இராஜதந்திர உறவுகள் ஆரம்பித்த காலத்திலிருந்தே இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவிகளை எப்பொழுதும் நல்கி வருவதாக இந்நிகழ்வில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## அந்நூர் அரபுகலாபீட மாணவர்கள் உயர்தரத்தில் சாதனை

(ஓட்டமாவடி எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி-நாவலடி மர்கஸ் அந்நூர் அரபுக்கலாபீடத்தில் இம்முறை க.பொ.த உயர் தரப் பரீட்சை எழுதிய தந்தையை இழந்த ஒன்பது மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

இம் மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மர்கஸ் அந்நூர் கலாபீட கேட்போர் கூடத்தில் மிகவும் சிறப்பான முறையில் கலாபீடத்தின் தலைவரும் வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான அஷ்ஷெய்க் ஏ.எல். பீர்முகம்மது காஸிமின் வழிகாட்டலில் கலாபீட அதிபர் அஷ்ஷெய்க் ஏ.ஹபீப் காஸிமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜமாஅது அன்சாரிஸ் ஸுன்னதில் முஹம்மதிய்யாவின் பொதுத்தலைவர் அஷ்ஷெய்க் என்.பீ.எம். முஹம்மது அபூபக்கர் சித்தீக் மதனி கலந்து கொண்டதோடு, ஏனைய அதிதிகளாக மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அரபுக்கல்லூரியின் தலைவர் சட்டத்தரணி எம்.எம்.ராஸிக் , வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், ஓட்டமாவடி கோட்டக் கல்விப்பணிப்பாளர் எம்.எல்.ஏ.ஜுனைத் மற்றும் தாருஸ்ஸலாம் கலாபீட அதிபர் அஷ்ஷெய்க் எம்.பீ.எம். இஸ்மாயில் மதனி, ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய அதிபர் எம்.ஏ.சாபீர், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். பரீட், ஸ்டைலிஸ் ஆடையக உரிமையாளர் ஏ.எல்.எம்.றிஸ்வி உட்பட பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# சட்டத்தை மீறும் எவரும் ஊடகங்களிடமிருந்து தப்பிக்கமுடியாது

**-பேசல ஜயரத்ன**

( கலாவெவ நிருபர்)

தகவல் அறியும் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.இனி தவறு செய்யும் எவரும் ஊடகவியலாளர்களிடமிருந்து தப்பிக்க முடியாது.இதனால் அரசாங்க ஊழியர்கள் தமது கடமைகளை சரியாக செய்வார்கள் என வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன பண்டார தெரிவித்தார்.

நொச்சியாகம மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன பண்டார மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

கிராம சேவையாளர் தமது கடமைகளை சரியாக செய்ய வேண்டும். வைத்தியர்கள் ,ஆசிரியர்கள் தமது கடமைகளை சரியாக செய்ய வேண்டும். அவ்வாறு அரச ஊழியர்கள் தமது கடமைகளை சரிவரச் செய்யும் போது,மக்கள் அரசியல்வாதிகளை நாடி தமது குறைகளை கூற வரமாட்டார்கள்.

14 இலட்சத்துக்கு அதிகமான அரச ஊழியர்கள் இந்நாட்டில் இருக்கின்றார்கள். எனவே இவர்கள் தமது கடமை சரிவரச் செய்யும் போது மக்கள் அரசின் மீது திருப்தி அடைவார்கள் அவர்களை குறைகளை எடுத்துக் கொண்டு அரசியல்வாதிகளை நாடி வரமாட்டார்கள்.

எனவே அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரிவர செய்யத் தவறும் பட்சத்தில் முறைகேடான முறையில் நடந்து கொள்ளும் போது ஊடகவியலாளர்கள் அதனை அறிந்து தகவலை திரட்டி ஊடகங்களுக்கு வெளியிடுவார்கள் அதற்கான சட்டம் தற்போது அமுலுக்கு வந்துள்ளது.

எனவே சட்டத்தை மீறும் எவரும் தப்பிக்க முடியாது எனவே அரச ஊழியர்கள் தமது கடமைகளை சரியாக செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.



# தல்கஸ்பிட்டியின் முதற்சட்டத்தரணி



அரநாயக்க தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த எம்.என்.எம். ஹிசாம் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக அண்மையில் உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தல்கஸ்பிட்டி கிராமத்தின் முதலாவது சட்டத்தரணியான இவர் தல்கஸ்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பம் முதல் உயர்தரம் வரை கல்வி கற்று 2012 இல் நடைபெற்ற சட்டக் கல்லூரிக்கான தேர்வுப்பரீட்சையில் அகில இலங்கை மட்டத்தில் 23 ஆவது இடத்தில் தெரிவாகி சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்றார். இவர் தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த எம்.ஐ.எம். நசிர் மற்றும் ஏ.டபிள்யு சித்தி மர்ளியாவின் மகனாவார்.

# ஹுமைரா மகளிர் அரபுக் கல்லூரி ஆரம்பம்

(மினுவாங்கொடை நிருபர் )

மினுவாங்கொடை - கல்லொழுவை, தாருல் அர்கம் கல்விப் பீடத்தின், புதிய ஹுமைரா மகளிர் அரபிக் கல்லூரியின் ஆரம்ப நிகழ்வு, நேற்று (12) கல்லூரி மண்டபத்தில், கல்லூரி அதிபர் எச். எம். ஸமீர் ( நீனி ) தலைமையில் இடம்பெற்றது.

கல்லொழுவை ஜும் ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல் ஹாஜ் ஏ. எச். எம். முனாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில், கொழும்பு - மர்கஸ் ஸபீலுர் ரஷாத் அரபிக் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷேஹ், அல் ஹாபிழ் அப்துல் ஹாலிக் (தேவ்பந்தி) விசேட மார்க்கச் சொற்பொழிவாற்றினார்.

இன்று (13) திங்கட்கிழமை தொடக்கம் ( பாடசாலை நாட்களில் ) காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை, பகுதி நேரமாக இயங்கவுள்ள இக் கல்லூரியில், முதற் தடவையாக 42 மாணவிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்ப கட்டமாக, க.பொ.த. (சா /த) பரீட்சை எழுதிய மாணவிகள், இக் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






அகில இலங்கை கம்பன் கழகம் ஏற்பாடு செய்திருந்த கம்பன் விழா 2017 கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கொழும்பு தமிழ் சங்கத்தின் பெருந்தலைவர் ஜே.விஸ்வநாதன் தலைமையில் கடந்த வியாழன் (09) ஆரம்பமாகியது.இந்நிகழ்வில் அதிதிகள் வருகை தருவதையும் நடைபவனியில் பெண்கள் கலந்து கொண்டிருப்பதையும் ஜே.விஸ்வநாதனிடமிருந்து கம்பனின் அரசியல் நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் படங்களில் காணலாம். (படம்-ஏ.எஸ்.எம்.இர்ஷாத்)

# பொறுமை காத்து உரிமைகளை வெல்வோம்

## தம்புள்ளையில் அமைச்சர் றிஷாத்



இனவாதிகள் நமக்கு தொடர்ந்து கஷ்டங்களை தந்த போதும் சிங்கள சமூகத்துடன் முரண்படாது தம்புள்ளை பிரச்சினையை வென்றெடுக்க வேண்டுமென்று அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

தம்புள்ளையில் கடந்த புதனுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து அந்த பிரதேசத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் றிஷாத் பதியுதீன் பாதிக்கப்பட்ட தம்புள்ளை வர்த்தகர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.தமக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து வர்த்தகர்கள், அமைச்சரிடம் எடுத்துரைத்ததுடன் இந்த சந்தர்ப்பங்களின் போது பொலிஸார் ஓரவஞ்சனையுடன் செயற்பட்டதாக கவலை தெரிவித்தனர்.

அமைச்சர் இங்கு மேலும் கூறியதாவது,

இந்த நாட்டிலே எவருக்கும் எந்த இடத்திலும் வாழ முடியும். எங்கும் தொழில் செய்யும் உரிமையுமுண்டு.

இனவாதிகள் முஸ்லிம் கடைகளை மட்டும் அடையாளப்படுத்தி வெளியேறுமாறு கோருவது அப்பட்டமான அராஜகமானதாகும். என்னதான் கஷ்டங்கள் வந்தாலும் நீங்கள் இந்த பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களுடன் முரண்படாதீர்கள்.

இனவாதிகளும் இதனையே எதிர்பார்க்கின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரச உயர் மட்டத்துடன் பேச்சு நடத்துவேன். வர்த்தகர்களாகிய நீங்கள் சிங்கள வர்த்தகர்களுடன் இணைந்து மக்கள் சார்ந்த சில திட்டங்களை முன்னெடுப்பது அந்தப்பிரதேச உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவும் என அமைச்சர் தெரிவித்தார்.

## மு.கா. புதிய நிர்வாகிகள் விபரம்

2017 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27 பேரைக் கொண்ட புதிய நிர்வாக சபை நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இரவு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27 ஆவது பேராளர் மாநாடு நேற்று (12) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட கட்சியின் புதிய நிர்வாக உறுப்பினர்களின் விபரங்கள்,

தலைவர் - ரவூப் ஹக்கீம் ,சிரேஷ்ட பிரதித் தலைவர் - ஏ.எல்.ஏ.மஜீத்,பிரதித் தலைவர் 1 - ராவுத்தர் நெய்னா முஹம்மத்,

பிரதித் தலைவர் 2 - ஹாபிஸ் நசீர் அஹமட், பிரதித் தலைவர் 3 - யூ.டி.எம். அன்வர், பிரதித் தலைவர் 4 - எச்.எம்.எம்.ஹரீஸ், செயலாளர் - மன்சூர் ஏ. காதர் ,பொருளாளர் - எம்.எஸ்.எம்.அஸ்லம், மஜ்லிஸல் ஷூரா தலைவர் - ஏ.எல்.எம்.கலீல் மௌலவி,தேசிய ஒருங்கிணைப்பாளர் - ஏ.எம்.மன்சூர்,கொள்கை பரப்புச் செயலாளர் - யூ.எல்.எம்.முபீன்,தேசிய அமைப்பாளர் - சபீக் ராஜாப்தீன்,சர்வதேச விவகார பணிப்பாளர் - ஏ.எம்.பாயிஸ்,யாப்பு விவகார பணிப்பாளர் - எம்.பி.பாரூக்,இணக்கப்பாட்டு வாரியம் - எம்.எஸ். தௌபீக்,உலமா காங்கிரஸ் - எச்.எம்.எம். இஸ்யாஸ் மௌலவி,அரசியல் விவகார பணிப்பாளர் - எஸ்.எம்.ஏ.கபூர்,பிரதித் தவிசாளர் - எம்.நயிமுல்லாஹ் ,பிரதிச் செயலாளர் - நிசாம் காரியப்பர்,பிரதிப் பொருளாளர் - கே.எம்.ஏ.ஜவாத்,மஜ்லிஸல் ஷூரா பிரதித் தலைவர் - சியாத் ஹமீட் ,பிரதி தேசிய ஒருங்கிணைப்பாளர் - ரஹ்மத் மன்சூர் ,பிரதி தேசிய அமைப்பாளர் - பைசால் காசிம்,மேலதிக கொள்கை பரப்புச் செயலாளர் - அலிசாஹிர் மௌலான ,செயற்குழு செயலாளர் - றிஸ்வி ஜவகர்ஷா,போராளர் மாநாட்டு செயலாளர் - ஐ.எல்.எம்.மாஹரூப் ,மஜ்லிஸல் ஷூரா செயலாளர் - யூ.எம்.வாஹீட்

## இந்திய முஸ்லிம் லீக் பதில் தலைவராக பேராசிரியர் காதர் முகைதீன் தெரிவு

### அமைச்சர் ஹக்கீம் தொலைபேசியில் வாழ்த்து

(திருச்சி சாஹூல் ஹமீத்)



அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பதில் தேசிய தலைவராக தமிழ்நாடு முஸ்லிம் லீக்கின் தலைவரும், அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசிய பொதுச் செயலாளருமான பேராசிரியர் கே.எம்.காதர் முகைதீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அகில இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவராக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் இ.அஹமது காலமானதையடுத்து பதில் தலைவராக காதர் முகைதீன் தெரிவுசெய்யப்பட்டார். இவரது தெரிவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேராசிரியர் காதர் முகைதினுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய தலைவர் இ.அஹமது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததோடு அவரது மஹ்பிரத்திற்காக து ஆ செய்வதாகவும் அவரை இழந்து வாடும் குடும்பத்திற்காக தனது இரங்கலை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அதே போன்று இவருடைய இழப்பு முஸ்லிம் சமுதாயத்திற்கு பெரும் இழப்பாகும். கட்சிக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

இவர் வெளியுறவுத் துறை அமைச்சராக பணியாற்றிய பொழுது இவரது ஆக்கபூர்வமான பணியான ஹஜ் சம்பந்தமான பணிகள் மற்ற நாடுகளுடன் இணக்கமான உறவுகளை பேணிக்காப்பதில் வல்லமை படைத்தவராக இருந்தார். அப்படிபட்ட வரை இழந்து இருப்பது கட்சிக்கு மிகப்பெரிய பேரிழப்பாகும்.கட்சியின் தற்காலிக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதிற்கும் விரைவில் கட்சியின் நிரந்தர தலைவராக வருவதற்கும் வாழ்த்து தெரிவித்தார். மேலும் உங்கள் பணிகள் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

எமது செய்தியாளர் திருச்சி எம்.கே. சாகுல் ஹமீதிடம் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது: தேசிய பொறுப்பு தலைவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் கே.எம். காதர் மொய்தீன் என்னுடைய நீண்ட கால நண்பர். இந்தியாவில் எனக்கு பிடித்த அரசியல் தலைவரில் ஒருவர் காதர் மொய்தீன். இவருடைய பணி ஈடு செய்ய முடியாத பணியாகும். இவர் ஆரம்ப காலத்தில் இருந்து நமது சமுதாய மக்களுக்காக பாடுபட்டு வருகிறார்.

அதுமட்டுமல்லாமல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது இவருடைய பேச்சுகள் எல்லாம் இனிமையாகவும் நல்ல கருத்துகளை கொண்டதாகவும் இருக்கும்.

எந்த சமயத்திலும் நமது சமுதாய மக்களின் நலனை கருத்தில் கொண்டு செயல்படக் கூடியவர். கண்ணியமிகு காயிதே மில்லத்தால் அடையாளம் காணப்பட்டவர் பேராசிரியர் இவர் தேசிய பொறுப்பு தலைவராக பொறுப்பு ஏற்றதற்கும் விரைவில் நிரந்தர தலைவராக வருவதற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகவும் மற்றும் இலங்கையில் உள்ள முஸ்லிம்மக்கள் சார்பாகவும் அவர் கூறினார்.

# பசுமைக்கனவு இன்று

## முழு மனித சமூகத்தினதும் கனவாகியுள்ளது

### ஜனாதிபதி



மொரகஹகந்த திட்டத்தின் பெறுபேறாக வடமேல் மாகாண பாரிய வாய்க்கால் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்தர்ர்.

நேற்று (12) முற்பகல் குருணாகல் குள சுற்றுவட்ட சுற்றாடல் வலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட பசுமைக் கனவு 2017 கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இயற்கை வளங்களை அழிக்கும் கடத்தல்காரர்கள் மற்றும் அறியாமை காரணமாக இயற்கை வளங்களின் பெறுமதியை கருத்திலெடுக்காமல் செயற்படுபவர்கள் இப்போது நாட்டின் சுற்றாடலை அழித்து வருகின்றனர்.

இன்று பெருமளவில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்தல், கல்லுடைத்தல், மண்அகழ்வு ஆகிய பாரதூரமான சுற்றாடல் அழிவு, பசுமைக் கனவை அடைவதற்கு சவாலாக இருக்கின்றது.

அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற மண்அகழ்வு காரணமாக அந்த பிரதேசத்தில் ஏற்பட்ட பாரிய அழிவு தொடர்பாக நினைவுபடுத்திய ஜனாதிபதி அவர்கள் அந்த சம்பவத்துடன் தொடர்புடைய பொறியியலாளர் மற்றும் பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மண் அகழ்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதனை ஆராய்ந்து பார்ப்பது தொடர்புடைய நிறுவன அலுவலர்களின் பொறுப்பாகும்;.

பசுமைக் கனவு இன்று முழு உலகினதும் மனித சமூகத்தினதும் கனவாக மாறியுள்ளது. பசுமைக் கனவை அடையாவிட்டால் முழு உலகினதும் இருப்பு சிக்கலுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என தெரிவித்தார்.

நீல வானம், பசுமை நிலம், பேணப்பட்ட சக்தி, நலமான உணவு, சுகமான நாளை, போதையிலிருந்து விடுபடுவோம் மகிழ்வுடன் இருப்போம், உணவைப் பாதுகாப்போம். ஆகிய ஆறு கண்காட்சி வலயங்கள் மற்றும் 100 காட்சிகூடங்களைக் கொண்ட இக் கண்காட்சி பெப்ரவரி 12,13,14 ஆகிய மூன்று நாட்களிலும் பிற்பகல் 2.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை இடம்பெறும்.

ஜனாதிபதி கண்காட்சியை திறந்து வைத்து, அதனை பார்வையிட்டதுடன், பசுமைக் கனவை அடைவதற்கு முன்னோடி செயற்பாடுகளை மேற்கொண்டோருக்கு பரிசில்களையும் வழங்கினார். அமைச்சர்களான எஸ்.பி.நாவின்ன, காமினி ஜயவிக்கிரம பெரேரா, அனுர பிரியதர்ஷன யாப்பா, பிரதி அமைச்சர்களான இந்திக்க பண்டாரநாயக்க, அசோக அபேசிங்க, வடமேல் மாகாண ஆளுனர் அமரா பியசீலி ரத்நாயக்க, முதலமைச்சர் தர்மசிறி தசநாயக்க மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.



மறைந்த பிரபல இலத்திரனவியல் ஊடகவியலாளர் ஆரியதாச பீரிஸின் (91) இறுதி கிரியை நேற்றைய தினம பொரளை பொது மயானத்தில் இடம்பெற்றது. மறைந்த ஊடகவியலாளர் ஆரியதாச பீரிஸின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க மிரிஹானயிலுள்ள வீட்டிற்கு சென்று அஞ்சலி செலுத்தினார்.

# அழிவை நோக்கி ஹக்கீமின் பயணம்

## பசீர் சேகுதாவூத் கண்டனம்



தனது அதிகாரத்தின் கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைக் கொண்டுவந்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் அழிவை நோக்கி நகர்ந்துக் கொண்டிருக்கிறார் என்று மு.கவின் முன்னாள் தவிசாளர் பசீர் சேகுதாவூத் நேற்றைய தினம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இதுவிடயம் தொடர்பில் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று (நேற்று) 12 ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு 30 ஆவது வருடம் தொடங்கும் நாள். 11.02.1987 இல் கட்சி பதிவு செய்யப்பட்டது.

இந்த முப்பதாவது வருடத்தில் மூத்த போராளிகளுக்கெல்லாம் முந்திய போராளி சகோதரர் ஹஸன் அலி இல்லாமல் பேராளர் மாநாடு நடைபெறுகிறது. ஏற்கனவே ஏமாற்றங்கள் கனத்தும், வஞ்சனைத் தீ கனன்றும், இதயம் களன்றும் கிடந்த நமது கட்சி முப்பதாவது வருடத்தில் முகத்தையும் தொலைத்து நிற்கிறது.முப்பது வருடத்தைத் தொட்ட நேற்றைய தினம் இடம் பெற்ற கட்டாய உச்சபீடக் கூட்டத்தின் தீர்மானப்படி, 2015 ஆம் ஆண்டு சட்டபூர்வமற்ற வகையில் திருத்தப்பட்ட யாப்பில் உள்ள அதிகாரத்துக்கு மேலதிகமாக, மேலும் பல சர்வாதிகார சரத்துகள் தலைவருக்கு வசதியாக உள்ளே புகுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தலைவர் எனும் தனி நபர் மட்டும் கட்சியாக ஆக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் அண்மைய வரலாற்றில், அதிகாரத்தைத் தன்னகத்தே மட்டும் தக்க வைத்து அதன்மூலம் கோலோச்ச முயன்ற சிங்கள, தமிழ் தலைவர்கள் இருவரைக் கண்டோம். இவர்கள் தமது தனிப்பட்ட தீர்மானங்களினால் எப்படி அழிந்தனர் என்பதையும் தெளிவாக நாமறிந்தோம். அழிந்த சிங்களவர் மஹிந்த ராஜபக்ச என்பதும், தமிழர் பிரபாகரன் என்பதும் இரகசியமல்ல.

இது போல தனது சர்வாதிகார அவாவினாலும், தனிப்பட்ட தீர்மானங்களாலும் ஒரு முஸ்லிம் தலைவர் அழிவை நோக்கி நகர்கிறார். அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகும். சிலரின் தலைவிதி எழுதப்பட்டுவிட்டது. இன்னும் சிலரின் தலை விதி எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

## சிகிரியாவில் விரைவில் லிப்ட் வசதி அறிமுகம்

சிகிரியாவை பார்வையிடச் செல்பவர்களுக்கு வசதியாக லிப்ட் மற்றும் எலக்ரிக் மோட்டார் வாகனங்களை பயன்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தவுள்ளதாக, கல்வி அமைச்சர் அகில விராஜ்காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

தொல்பொருட்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், சிகிரியாவுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, லிப்ட் மற்றும் எலக்ரிக் மோட்டார் வாகனங்கள் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

சிகிரியா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதேவேளை, சீகிரியாவுக்கு செல்லும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இணையத்தின் மூலம் டிக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## ஜனாதிபதி இன்று கலேவெலையில்

(வஹக்கோட்டை முனாஸ்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றைய தினம் கலேவெலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்றைய தினம் காலை 10 மணியளவில் வேமெடில்ல நீர்த்தேக்கத்திலிருந்து வடமேல் மாகாணத்துக்கு நீர்கொண்டு போகும் வாய்க்கால் வெட்டும் பணிகள் அவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டு பொதுக்கூட்டமொன்றும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

‘லக்சல’

LAKSALA
All of Sri Lanka

இலங்கை கைவினைப் பொருட்கள் சபை

சுத்திகரிப்பு சேவை வழங்குதல் - 2017

இலங்கை கைவினைப் பொருட்கள் சபைக்கு 2017 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்காக, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து முத்தரையிடப்பட்ட விலை மனு கோரப்படுகின்றது.

விலை மனு நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றை, மீள செலுத்தப்படாத மனு கட்டணமான 1000 ரூபாவை செலுத்துவதன் மூலம், இலக்கம்: 215, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07. இல் அமைந்துள்ள இலங்கை கைவினைப் பொருட்கள் சபையின் கட்டுப்பாட்டு பிரிவில், பணி செய்யும் வார நாட்களில் 2017.02.13 முதல் 2017.02.27 வரை, காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளலாம். அத்தோடு, முறையாக பூரணப்படுத்தப்பட்ட விலை விபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் 2017.02.28 பிற்பகல் 2.30க்கு முன்னர் கிடைக்கும் வகையில், முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு, பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது இம் முகவரிக்குரிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் மனு பெட்டியில் இடப்படல் வேண்டும்.

விலை மனு முன்வைக்கப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சுத்திகரிப்பு சேவைக்கான விலை மனு - 2017 என்று குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியில் குறித்த நேரத்திற்குப்பின் கிடைக்கப்படும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலை மனுக்கள் கிடைக்கப் பெற்றதுமே, அவற்றை திறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும் அதேவேளை இச்சந்தர்ப்பத்தில் நீங்களோ அல்லது உங்களது பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள முடியும்.

14.10.2016 ஆம் திகதிய பத்திரிகை ''சுத்திகரிப்பு சேவை வழங்குதல்'' என்ற விளம்பரத்தின் படி தமது கேள்விமனுக்களை முன்வைத்த நிறுவனங்கள் இந்த விளம்பரத்திற்கான கேள்வி மனுக்களை முன்வைக்கும் போது மனுக் கட்டணமான 1000 ரூபாவை செலுத்த வேண்டியதில்லை.

பணிப்பாளர் (மனிதவளம்/நிர்வாகம்)
இலங்கை கைவினைப் பொருட்கள் சபை - லக்சல
இலக்கம்: 215, பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு - 07.
தொலைபேசி : 011- 2055717 / 2055501
2017/02/13

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
13TH FEBRUARY 2017 - MONDAY

## தம்புள்ளையில் 3 நாட்கள் முஸ்லிம் கடைகள் பூட்டு;
# சட்டம் தூங்கியதா?

கடந்த புதனன்று தம்புள்ளை நகரில் 'பேகர் பன்' ஒன்று தொடர்பாக ஏற்பட்ட ஒரு சிறிய சர்ச்சை காரணமாக நகரிலுள்ள முஸ்லிம்களது கடைகள் மூன்று நாட்களாக மூடப்பட்டு கடந்த சனியன்று திறக்கப்பட்டது.

மூன்று நாட்களாக ஒரு நகரிலுள்ள கடைகள் காடையர்களது அச்சம் காரணமாக மூடப்பட்டிருந்தால் பொலிஸார் இந்த மூன்று நாட்களும் என்ன செய்தார்கள்? என்ற கேள்வி இப்போது எழுப்பப்படுகின்றது.

பணிஸ் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையின் பின் நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக சுமார் 25 இளைஞர்கள் ஊர்வலம் சென்றதோடு, கடைகளை மூடிவிடுமாறும் அச்சுறுத்தல் விடுத்ததனையடுத்தே முஸ்லிம்கள் தம் கடைகளை மூடிவிட்டு வெளியேறியுள்ளனர்.

சில கடைகளில் காடையர்கள் கப்பம் பெற்றுள்ளனர். இது தவிர, சிங்கள சகோதரர்களால் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கும் கடைகளிலிருந்து அகற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முஸ்லிம் தரப்பில் தவறிழைக்கப்பட்டிருந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக நகரில் நீண்ட காலமாக ஐக்கியத்துடனும் சௌஜன்யத்துடனும் வாழும் முஸ்லிம்களை இலக்காக வைத்து இந்த கசப்பான சம்பவங்கள் நடைபெறும் வரை தம்புள்ளைப் பொலிஸாரும் மற்றும் மாத்தளை மாவட்டத்தின் உயர் பொலிஸ் அதிகாரிகளும் என்ன செய்தார்கள்?

காடையர்களின் கரங்கள் ஓங்கி, தவறு செய்ததாகக் கூறப்படும் ஹோட்டலின் முகாமையாளர் 25க்கு மேற்பட்டோரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பட்டப்பகலிலே பொலிஸார் நகரிலிருக்கும் போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. சட்டத்தைப் பேணும் அதிகாரிகள் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் நடக்கும் வரை பார்த்துக் கொண்டிருந்தார்களா? இந்த சம்பவம் தொடர்பாக நடந்த கசப்பான சம்பவங்கள் பற்றி சீ. சீ. ரீ.வி. காணொளிகள் உள்ளன. கடைகளை மூடுமாறு அச்சுறுத்தியது யார்? என்பதனைக் கண்டுபிடித்து எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதினை உறுதிப்படுத்துவது சட்டம் ஒழுங்குக்கும் பொறுப்பான அமைச்சர் சாகல ரத்நாயக்க முன்னுள்ள பொறுப்பாகும்.

இன்று முஸ்லிம்கள் தொடர்பான பிரச்சினைக்காக கடைகளை மூடுமாறு அச்சுறுத்தினர்கள். நாளை வேறு, வேறு அரசியல் காரணங்களுக்காகவும் குண்டர்கள் இவ்வாறு செயற்பட முற்படலாம்.

மாத்தளை சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனநாயகத்தை பலப்படுத்தும் சங்கத்தின் தலைவரும் தம்புள்ளைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளருமான எஸ்.வை. எம். சலீம்தீன் விடுத்துள்ள அறிக்கையில் பொலிஸாரின் அசிரத்தையாலே கடைகள் மூடப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில், தம்புள்ளை முஸ்லிம்கள் மத்தியில் ஐக்கியமின்மை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தம்புள்ளை நகரில் முஸ்லிம்கள் இது குறித்து தீவிரமாகச் சிந்திப்பது அவசியமாகும்.

இதேநேரம் தம்புள்ளைச் சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்ததும் எந்த ஒரு முஸ்லிம் அமைச்சரோ பாராளுமன்ற உறுப்பினரோ அங்கு சென்று அப்பிரதேச அரசியல் தலைவர்களுடன் இணைந்து உயர் மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தால் மூன்று நாட்களுக்கு கடைகளை மூட வேண்டிய தேவை இருந்திருக்காது. வெளிநாடு சென்றிருந்த அமைச்சர் றிஷாத் பதியுதீன் நாடு திரும்பியதும் அடுத்த நாளே அங்கு சென்று நிலமைகளை கேட்டறிந்துள்ளார்.

இது போன்ற விடயங்களில் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் துரிதமாக களத்திற்குச் சென்று இயங்குவதற்கு முன்வரவேண்டும்.

மூன்று நாட்கள் முஸ்லிம்களது கடைகள் மூடப்பட்டன என்பது இந்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படுவதில்லை என்பதனை உணர்த்துவதாகவே உள்ளது.

நாட்டில் 'தூங்காத நகரம்' எனக் கூறப்படும் தம்புள்ளையில் இடம்பெற்ற இந்த கசப்பான நிகழ்வுகளை ஒரு சாதாரண விடயம் எனக் கூறி புறந்தள்ளிவிடாது, எதிர்காலத்தில் எங்கும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருப்பதனை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

# நல்லாட்சியில்
# மெல்லத் தலைதூக்கும் ஊடக அடக்குமுறை

எம்.ஏ.முஹம்மட் உவைஸ்

இந்த நாட்டில் இடம்பெற்ற 30 வருட யுத்தத்தைக் காரணங் காட்டி இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் யுத்தத்துடன் எந்த வகையிலும் தொடர்புபடாத எத்தனையோ சிவிலியன்களை -துறை சார்ந்தோரை பெரும் சிக்கலுக்குள் தள்ளி இருக்கின்றார்கள் என்பதை வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எமக்குப் புரிந்து கொள்ள முடியும்.

யுத்தத்தில் கலந்துகொண்ட புலிகள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அப்பாவித் தமிழர்கள் நசுக்கப்பட்டனர்;கடத்தப்பட்டனர் காணாமல் செய்யப்பட்டனர்;கொல்லப்பட்டனர்.

அதேபோல், யுத்தம் என்ற போர்வையில் அரசால் அரங்கேற்றப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது.

கருத்துச் சுதந்திரம் அறவே இருக்கவில்லை.அரசின் அநியாயங்கள் விமர்சிக்கப்பட்டால் அது தேச துரோகமாக சித்தரிக்கப்படும். சில அப்பாவிப் பொது மக்கள் அந்த 'தேச துரோகம்' என்ற பதத்துக்கு மயங்கவே செய்தனர்.



ஊடகவியலாளர்கள் முதல் அனைவரது கருத்துக்களும் அரசுக்கு சாதகமாகவே இருக்க வேண்டும்.

எதிராகக் கருத்துத் தெரிவித்தால் அந்தக் கருத்துக்கு 'தேச துரோகம்' என்ற முத்திரை குத்தப்படும்.

ஒன்றன்பின் ஒன்றாக ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்ட போது-கொல்லப்பட்டபோது -மிரட்டப்பட்ட போது-வெளிநாடுகளுக்கு விரட்டியடிக்கப்பட்ட போது அவை தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்காது, மாறாக, இவ்வாறான சம்பவங்கள், சரியானவைதான் என்று மக்கள் கருதும் விதத்தில் அரசு மறைமுக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.அதுதான் 'தேச துரோகம்' என்ற பதம்.

தேச துரோகம் என்ற பதத்தால் அனைவரும் அடங்கிப் போகினர்.அந்த அளவுக்கு மஹிந்த அரசும் யுத்த வெற்றியும் புனிதமாக மதிக்கப்பட்டன.

இந்த சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக எவராலும் எதையும் செய்ய முடியவில்லை.ஆட்சி மாற்றம் ஒன்றையே இதற்குத் தீர்வாக மக்கள் எதிர்பார்த்தனர்.

இவ்வாறான அடக்குமுறைகளுக்குள் சிக்கித் தவித்த பல துறைகளுள் முக்கியமானதுதான் ஊடகத் துறை. இந்த ஊடகத் துறை எவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்டது;ஊடகவியலாளர்கள் எவ்வாறு மௌனிகளாக்கப்பட்டார்கள் என்பதை இந்த உலகம் நன்கு அறியும். அதனால்தான் சர்வதேசம் அப்போது முதல் ஊடகவியலாளர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றது.

மஹிந்தவின் ஆட்சிக்கு முன்பும் ஊடக அடக்குமுறைகள் இடம்பெற்றுள்ளன;ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.ஆனால், மஹிந்தவின் ஆட்சியில்தான் இது உச்சத்தைத் தொட்டது.வரலாற்றில் என்றுமில்லாதவாறு ஊடகங்கள் நசுக்கப்பட்டன.

44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டுள்ளன. ஊடக நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் மிரட்டப்பட்டுள்ளனர். அதிகமான ஊடகவியலாளர்கள் உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர்.

இறுதிப் பத்து வருடங்களில்தான் இந்த அடக்குமுறை உச்சத்தில் இருந்தது. ஊடகவியலாளர்களான நடேசன், சுகிர்தராஜன், சிவராம் ஐதராக்கி, லசந்த விக்ரமசிங்க போன்ற பலர் கொல்லப்பட்டனர். எக்னலிகொட கடத்தப்பட்டார். சுடர் ஒளியின் முன்னாள் ஆசிரியர் வித்தியாதரன் கடத்தப்பட்டு மயிரிழையில் தப்பினார். அந்தக் கடத்தல் நாடகம் சிக்கியதால் அதைக் கைதாக மாற்றினார்கள்.

2005 இல் கொழும்பு புறக்கோட்டையில் இடம்பெற்ற ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற சுடர் ஒளியில் செய்தியாளர் ஜதுரசன் என்பவர் புலி உறுப்பினர் என்ற சந்தேகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் ஊடகங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டதால் கொழும்பில் அமைந்துள்ள சுடர் ஒளியின் அலுவலகம் மீது கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு பணியாளர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.அதனைத் தொடர்ந்தும் சுடர் ஒளிக்குப் பல நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன.

அதேபோல், யாழில் இயங்கி வரும் உதயன் பத்திரிகை அலுவலகம் மீதும் அந்நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஊடகவியலாளர்கள் மாத்திரமன்றி சந்தைப்படுத்தும் முகாமையாளர் உள்ளிட்ட பல பணியாளர்கள் கொல்லப்பட்டனர். பத்திரிகை விநியோகத்துக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. விநியோகத்துக்காகச் சென்ற மோட்டார் சைக்கிள்கள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

சிரச ஊடக நிறுவனம் இரண்டு தடவைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. பன்னிப்பிட்டில் உள்ள அந்த அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் அந்த அலுவலகத்தைத் தீ வைத்துக் கொளுத்தினர் பல ஆவணங்களை அழித்தனர்.

பிறகு மீண்டும் இரண்டாவது தடவை அந்த நிறுவனத்தின் கொழும்பு அலுவலகம் மஹிந்த அரசின் அனுசரணை பெற்ற ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டது.

அதேபோல், ரூபவாஹினி நிறுவனத்துக்குள்ளும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா புகுந்து தாக்குதல் நடத்தினார்.

இவ்வாறான அடக்குமுறைகள் காரணமாக அதிகமான ஊடகவியலாளர்கள் உயிருக்குப் பயந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றனர்.

ஆட்சி மாற்றத்தின் பிறகுதான் ஊடக நிறுவனங்கள் நிம்மதி பெரு மூச்சு விடத் தொடங்கின.

2015 ஜனவரியில் மஹிந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டு புதிய அரசு நாட்டின் நிர்வாகத்தைக் கையேற்றதும் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என்று அனைவரும் நம்பினர். மஹிந்த அரசால் தடை விதிக்கப்பட்டிருந்த சில செய்தி இணையத்தளங்கள் மீதான தடையை இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் நீக்கியது. கொலை செய்யப்பட்ட 44 ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் உறுதியளித்தார்.

இவையெல்லாம் ஊடகவியலாளர்களுக்கு இந்த அரசு மீது ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அந்த நம்பிக்கை வீண்போவதாகவே தெரிகின்றது. ஹம்பாந்தோட்டத்தை துறைமுக ஊழியர்களின் ஆர்ப்பாட்ட செய்திகளை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் கடற்படை அதிகாரியால் தாக்கப்பட்டமையும் அது தொடர்பிலான அரசின் செயற்பாடுகளும் முழு ஊடகங்களையும் அதிருப்தியடையச் செய்தன.

அது மாத்திரமன்றி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க தொடர்ச்சியாக பொது இடங்களில் ஊடகங்களை பெயர்கூறி விமர்சித்து வருகின்றமை ஊடகங்களை மேலும் அதிருப்தியடையச் செய்கின்றது.

மஹிந்த ஆட்சியைப் போல் கடுமையான நெருக்குதல்கள் இந்த ஆட்சியில் இல்லாதபோதிலும், எதிர்காலத்தில் அவ்வாறான நெருக்குதலை நோக்கி இந்த நிலைமை நகர்ந்துகொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதுபோக, மஹிந்த ஆட்சியில் அநீதியிழைக்கப்பட்ட ஊடகங்களுக்கு-ஊடகவியலாளர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. அந்த ஆட்சியில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிராகவும் எதுவித நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளவில்லை.

லசந்த மற்றும் எக்னலிகொட ஆகியோரின் விவகாரங்களை மாத்திரமே இந்த அரசு தூக்கிப் பிடிக்கின்றது. இது அரசியல் நோக்கம்கொண்டதாகும். ஊடகவியலாளர்கள் இவ்வாறான அணுகுமுறையை விரும்பவில்லை. அதை எதிர்க்கின்றார்கள்.

அது மாத்திரமன்றி, மஹிந்த ஆட்சியில் ஊடக நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் இந்த ஆட்சியில் பேச்சே இல்லை. சிரச மற்றும் யாழ்.உதயன் ஊடக நிறுவனங்கள் எதிர்கொண்ட தாக்குதல்கள் தொடர்பில் பேசப்படுவது கூட இல்லை.

தனது ஆட்சிக்கு இலாபத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை மாத்திரம் இந்த அரசு கையாள்வதாகவே தெரிகின்றது. 44 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஒரேயொரு ஊடகவியலாளரின் கொலையை மாத்திரம் தூக்கிப் பிடிப்பதை-அதற்கு மாத்திரம் நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முற்படுவதை ஏற்க முடியாது.

ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் தாக்கியவர்கள் ஊடக நிறுவனங்களைத் தீ வைத்துக் கொளுத்தியவர்கள் என இந்த அக்கிரமத்தில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கான தனியான விசாரணைக் குழுவொன்றை இந்த அரசு அமைக்க வேண்டும். இதுதான் ஊடகங்களுக்கு வழங்குகின்ற பூரண நிவாரணமாக இருக்கும். இனிமேல் ஊடகங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் இது காரணமாக இருக்கும்.

அதைவிட்டு ஊடக சுதந்திரத்தை மறைமுகமாக பறிக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஊடகங்களை விமர்ச்சித்துத் திரிவதை நிறுத்த வேண்டும். இங்கு ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று சர்வதேசத்துக்கு காட்டிவிட்டு இங்கு அதை முடக்குவதற்கு மறைமுகமாக முயற்சிகள் இடப்பெறுகின்றன என்றே சொல்ல வேண்டியுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 11ஆவது நினைவு நிகழ்வை கடந்த ஐந்தாம் திகதி கிழக்கில் நடத்திய கிழக்கு ஊடகவியலாளர்களின் கோரிக்கையை ஏற்று கொல்லப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களின் உறவினர்களுக்கும் நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

## இன நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாக அமைந்த
# 1949ஆம் ஆண்டின் சுதந்திர தின விழா



'நமோ நமோ' என்ற தேசிய கீதம் 1949ஆம் ஆண்டின் முதலாவது ஆண்டு நிறைவின் போது தமிழிலும் பாடப்பட்டதாக அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்திருந்ததது.

அன்று தமிழில் பாடியது ஆனந்த சமரகோனின் 'நமோ நமோ' கீதம் அதன் மெட்டுக்கு அதே கருத்துடன் தமிழில் பாடப்பட்டது.

எவ்வாறான போதும் அந்தப் பாடல் சோதிடர்கள் மற்றும் சங்கீதக் காரர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் மாற்றப்பட்டே பாடப்பட்டது. பெட்டகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கின்ற தூதினை எடுத்துச் சென்று பிரதமருக்கு அதனை கையளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிங்களத்திலான தூதுப் பயணம் தெவிநுவரயில் இருந்து ஆரம்பமானது. தமிழிலான தூது பருத்தித்துறையிலிருந்து கொண்டுவரப்பட்டது. அரபி மொழியிலான தூதுப் பயணம் மட்டக்களப்பில் இருந்து ஆரம்பமானது. ஆங்கில மொழியிலான தூதினை ஏந்திய பயணம் வெள்ளவத்தையிலிருந்து ஆரம்பமானது. இந்த நான்கு செய்திகளும் பொரளைச் சந்தியில் சந்தித்து அங்கிருந்து போட்டியாகவன்றி சமாந்தரமாக எடுத்துச் செல்லப்பட்டது. இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழில் அந்த பாடலை எழுதிய ஆனந்த சமரகோன் அத்தீர்மானத்திற்கு எதிரானபோதும் அவரால் எதனையும் செய்ய முடியவில்லை. எனினும் அவருடைய மரணச் சடங்கின் போது ஊடகவியலாளர்கள் சுமார் 100 பேர் 'நமோ நமோ' பாடலின் ஒரு எழுத்தைக் கூட மாற்றாது பாடியது சோகமிகு காட்சியாக இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நினைவு 68 வருடங்கள் பின் நோக்கிச் செல்கிறது. அந்த சுதந்திரதின விழாவை அறிக்கையிடச் சென்றிருந்த ஊடகவியலாளன் என்ற வகையில் எனது ஞாபகத்தில் இன்னும் இருப்பது நாட்டைச் சுற்றி வியாபித்திருந்த இடைக்கிடையிலான அஞ்சலோட்டமாகும். அது போட்டியல்ல, நாட்டின் நான்கு புறங்களிலுமிருந்து இளைஞர்கள் நான்கு மொழிகளில் முஸ்லிம், பறங்கி விளையாட்டு வீரர்களும் அதில் இணைந்திருந்தார்கள். அந்த ஓட்ட வீரர்கள் அவற்றை அவர்களுடைய தேசிய உடைகளை அணிந்தே எடுத்து வந்தார்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் ஆகிய நான்கு இனத்தையும் சேர்ந்த யுவதிகளே தேசிய உடையில் வந்திருந்தார்கள்.

இந்த இடைக்கிடையே இடம்பெற்ற ஓட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் பங்குபற்றினார்கள். விக்டர் ரத்நாயக்க (தெனியாய) எச்.ஆர்.யூ.பிரேமசந்திர (கடுகன்னாவ), மைத்திரிபால சேனாநாயக்க (மதவச்சிய), எம்.எஸ்.அபூபக்கர் (மூதூர்) ஆகிய நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களுமே இதில் பங்குபற்றியவர்களாவர்.

எஸ்.பியசேன,
நன்றி லங்காதீப

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
# நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

National Water Supply & Drainage Board

# கேள்விமனுக் கோரல்

திகதி : *13.02.2017*

கடன் இல. மற்றும் தலைப்பு : ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இல. *3029*-ஸ்ரீ; பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம் - திட்டம் 2

ஒப்பந்த இலக்கம் : GCWWMIIP/ADB/BUILD/CONDO/NCB/09

தலைப்பு : கொழும்பு நகரம் கிழக்கில், அரசுக்குச் சொந்தமான அடுக்குமாடி வீடமைப்பு அலகுகளின் நீர் விநியோகத்தொகுதியினை புனரமைத்தல்

கேள்விமனுக்கள் சமர்ப்பித்தலுக்கான கடைசித் திகதி : *04.04.2017, 10:00 மணி*

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம், பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை மேம்பாட்டு முதலீட்டு திட்டம் ; (GCWWMIIP) - திட்டம் 2 இனை மேற்கொள்வதற்கான செலவை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனாகப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதி மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் செலவுகளை மேற்கொள்ள பயன்படுத்தப்படும்.

2. தலைவர், நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு சார்பாக செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவரால் (பாரிய) (PPC-Major) , தேசிய போட்டி ஒப்பந்த விதிமுறைகளுக்கு அமைவாக ஒற்றை நிலை ஒரு உறை (NCB/SS-1E) ஏல முறையினூடாக மேல் குறிப்பிட்ட ஒப்பந்தத்துக்கான மூடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த கேள்விமனு கோருவோரிடமிருந்து தற்போது கோரப்படுகின்றது.

   அடுக்குமாடி வீடமைப்பு திட்டங்கள் கொழும்பு-*09*, கொழும்பு-*10* ஆகிய பகுதிகளில் அமைந்துள்ளது. மனு ஆவணமானது *3* பகுதிகளாக (Lot A, Lot B, Lot C) பிரிக்கப்பட்டு அவற்றின் நோக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| பகுதி இல **Lot No.** | அடுக்குமாடி வீடமைப்பு திட்டங்கள் | வேலையின் நோக்கங்கள் |
|---|---|---|
| Lot A | • கம்மல்வத்த வீட்டுத் திட்டம் NHDA<br>• கம்மல்வத்த வீட்டுத் திட்டம் -CMC<br>• கெடவலமுல்ல வீட்டுத் திட்டம் | நிலத்தடி தாங்கியை சீரமைத்தல், மொத்தமாக நீரை வழங்கும் மானிக்கான (Inlet Bulk Meter) கொங்ரீட் தொட்டியை (Concrete Chamber) நிர்மாணித்தல், பம்பி அறையை சீரமைத்தல், பம்பி மற்றும் பாகங்கள், Wall Rack, Panel Board போன்றவற்றை வழங்கலும் நிறுவுதலும், நிலமேல் தாங்கிகளை சீரமைத்தல் மற்றும் கல்வனைஸ்- இரும்பு ஏணியை வழங்கலும் பொருத்துதலும், விநியோகத் தொகுதிக்கான UPVC குழாய்களை வழங்கலும் பொருத்துதலும் |
| Lot B | • போபஸ் லேன் வீட்டுத்திட்டம் - (சாமபுர)<br>• போபஸ் லேன் வீட்டுத் திட்டம் - (நியு புளக்) | நிலத்தடி தாங்கியை சீரமைத்தல், பம்பி அறையை சீரமைத்தல், பம்பி மற்றும் பாகங்களை வழங்கலும் நிறுவுதலும், நிலமேல் தாங்கியை சீரமைத்தல், விநியோகத்தொகுதிக்கான UPVC குழாய்களை வழங்கலும் பொருத்துதலும் |
| Lot C | • ஜப்பார் காதர் வீட்டுத்திட்டம்<br>• அல்பியன் மாடிகள்<br>• ஜும்ஆ மஸ்ஜித் | நிலத்தடி தாங்கியை சீரமைத்தல், பம்பி அறையை சீரமைத்தல், நிலமேல் தாங்கி மற்றும் குழாய்த் தொகுதிகளை சீரமைத்தல், மொத்தமாக நீரை வழங்கும் மானிக்கான (Inlet Bulk Meter) கொங்ரீட் தொட்டியை (Concrete Chamber) நிர்மாணித்தல், வடிகால் நிர்மாணித்தல் |

- ஏலதாரர் ஒரு பகுதி **(Lot)** அல்லது இரண்டு பகுதிகள் **(Lots)** அல்லது அனைத்து பகுதிகளையும் **(Lots)** ஏலம் எடுக்க முடியும்.

3. வெற்றிகரமான கேள்வி மனுதாரர் கீழ் குறிப்பிடப்பட்ட தகுதிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

   - கடந்த *3* ஆண்டுகளுக்குள், நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அல்லது நிறைவடைந்துள்ள ஒப்பந்தங்களினால் உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளின் மூலம் பெறப்பட்ட சராசரி ஆண்டுப் புரள்வு கீழ் குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டும்.

| பகுதி இல. **(Lot No)** | தொகை (ரூபா) |
|---|---|
| பகுதி-ஏ (Lot A) | *30 மில்லியன்* |
| பகுதி-பி (Lot B) | *25 மில்லியன்* |
| பகுதி-சி (Lot C) | *51 மில்லியன்* |

   - கடந்த *10* ஆண்டுகளுக்குள், குறைந்தது இரண்டு பிரேரிக்கப்பட்ட வேலைகளை ஒத்திருக்கும் ஒப்பந்தங்களை வெற்றிகரமாக / பகுதியாக பூர்த்தி செய்து இருக்க வேண்டும். மேலும் கீழே குறிப்பிட்ட தொகைக்கு மேலான ஒப்பந்த தொகையைக் கொண்டிருக்க வேண்டும்.

| பகுதி இல. **(Lot No)** | தொகை (ரூபா) |
|---|---|
| பகுதி-ஏ (Lot A) | *12 மில்லியன்* |
| பகுதி-பி (Lot B) | *10 மில்லியன்* |
| பகுதி-சி (Lot C) | *20 மில்லியன்* |

   - கேள்வி மனுதாரர்களின் ஒத்ததன்மை பங்களிப்பானது பௌதீக அளவு, வேலையின் தன்மை, சிக்கல் தன்மையான முறைகள், தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அல்லது மற்றைய பண்புகள் பிரிவு 6இல் (Employer's Requirements) விபரிக்கப்பட்டதற்கு அமைவாக கருத்தில் கொள்ளப்படும்.

   - திரவச்சொத்துக்கள், கடன் இணைப்புக்கள் அல்லது ஏனைய நிதி மூலங்கள் மூலம் (ஒப்பந்த முற்பணம் தவிர) கீழ் காணப்படும் மாதாந்த நிதி ஆதார தேவைகளை அணுகுவதற்கான அல்லது கிடைப்பதற்கான தன்மையை விலை மனுதாரர் நிரூபிக்கவேண்டும்.

   -

| பகுதி இல. **(Lot No)** | தொகை (ரூபா) |
|---|---|
| பகுதி-ஏ (Lot A) | *8 மில்லியன்* |
| பகுதி-பி (Lot B) | *7 மில்லியன்* |
| பகுதி-சி (Lot C) | *14 மில்லியன்* |

4. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், உதவி பொது முகாமையாளர் (கேள்விமனுக்கள் மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), காலி வீதி, இரத்மலானை எனும் முகவரியிலும் தொலைபேசியூடாக இல. *+94 11-2635885* அல்லது *+94 11-2638999* அல்லது தொலைநகல் *+94 11-2635885* ஈமெயில் : agmtenders@waterboard.lk) என்பனவற்றிலும் மேலதிக தகவல்களை பெறலாம். மேலும் உதவி பொது முகாமையாளர் (கேள்விமனுக்கள் மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), காலி வீதி, இரத்மலானை, இலங்கையில் அமைந்துள்ள காரியாலயத்தில் கேள்விமனு ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

5. ஏல முற்கூட்டமானது *14.03.2017, 10:00* மணிக்கு செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு (PMU) காரியாலயம், இல.*65*, சாந்த லோரன்ஸ் வீதி, கொழும்பு-*6* எனும் விலாசத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் நடைபெறும். (R.S.V.P. *07.03.2017* அளவில் அல்லது அதற்கு முன்னர் GCWWMIIP யினது திட்ட பணிப்பாளர், பொறியியலாளர். எஸ்.ஏ. றஷீட் க்கு cwssiadb@yahoo.com அல்லது *0112363705* ஊடாக) அதனைத் தொடர்ந்து தொழில்தருநரின் கோரிக்கைக்கு அமைவாக நிர்மாணத்தளத்திற்கான விஜயம் (Site Visit) செய்யப்படும். சகல மனுதாரர்களும் முற்கூட்டத்திற்கு வருகைதருமாறு அவசியமாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. ஆர்வமுள்ள கேள்வி மனுதாரர்கள், ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி மனு ஆவணங்களைப் பெற, உதவி பொது முகாமையாளர் (கேள்விமனுக்கள் மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), காலி வீதி, இரத்மலானை எனும் முகவரிக்கு சாதாரண வேலை நாட்களில் *13.02.2017*ம் திகதி தொடக்கம் *03.04.2017*ம் திகதி *09.00*மணியிலிருந்து *15.00*மணி வரை வியாபார இலச்சினை பொறித்த கடிதத் தாளில் விண்ணப்பிப்பதன் மூலம் கொள்வனவு செய்யலாம். மீள செலுத்தப்படாத ஒப்பந்த தொகையான *15,000.00* ரூபா மற்றும் பெறுமதிசேர் வரியினையும் **(VAT)** பணமாகவோ அல்லது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு எழுதப்பட்ட வங்கி வரைவோலையாகவோ (Bank Draft) செலுத்தி கேள்வி மனு ஆவணத்தைப் பெறமுடியும்.

7. கேள்விமனு பெறப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி மனுக்கள் *119* நாட்களுக்கும் கேள்விமனு பாதுகாப்பு தொகை *147* நாட்களுக்கும் செல்லுபடியாகக் கூடியதாக இருக்க வேண்டும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி மனு ஆவணங்களை தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு - (பாரிய), பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மை மேம்பாட்டு முதலீட்டு திட்டம், ஒப்பந்த இல. **GCWWMIIP/ADB/BUILD/CONDO/NCB/09, Attn:** உதவி பொது முகாமையாளர் (கேள்விமனுக்கள் மற்றும் ஒப்பந்தங்கள்), தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB), காலி வீதி, இரத்மலானை, இலங்கை எனும் அலுவலகத்திற்கு கேள்வி மனு ஆவணத்தில் (தரவுத் தாள்-Data sheet) குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதில் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைவான ஏலப்பாதுகாப்புடன்(Bid Security) *04.04.2017 10:00* மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது ஒப்பந்த பெட்டியிலோ இடமுடியும்;.

9. தாமதித்து கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். *04.04.2017*ம் திகதி *10:00* மணிக்கு மேலே பந்தி *8*ல் கூறப்பட்டுள்ள விலாசத்தில் மனுதாரர் தெரிவு செய்து அனுப்பும் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விமனுக்கள் திறக்கப்படும்.

10. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது கேள்வி மனுதாரர்களின் கேள்விமனுத் தயாரிப்பு, ஏல முற்கூட்டத்தில் பங்குபற்றுதல் மற்றும் கேள்வி மனு ஒப்படைத்தல் என்பவற்றுக்கான எந்த செலவுகளுக்கும் பொறுப்பாகாது.

**தலைவர்,**
**செயற்திட்ட பெறுகைக் குழு - பாரிய,**
**பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர்**
**மேலாண்மை மேம்பாட்டு முதலீட்டு திட்டம்.**

## இணைக்கப்படாத
# வடகிழக்கிலே முஸ்லிம்களுக்கான தீர்வு வழங்கப்படவேண்டும்
## உலமாக்கட்சி

**(எஸ்.அஷ்ரப்கான்)**

தீர்வுத்திட்டத்தில் முஸ்லிம்களுக்கு என்ன தேவை என்பதை இன்னமும் முஸ்லிம்கள் தெரிவிக்கவில்லை என வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியிருப்பது குழந்தைத்தனமானது என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், முஸ்லிம்களுக்கான தீர்வுத்திட்டம் பற்றி அரசியல் திருத்த சபைக்கு உலமா கட்சியினால் முஸ்லிம்களுக்கான தீர்வுத்திட்டம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி பல தமிழ் ஊடகங்களிலும் வெளிவந்தது. முஸ்லிம்களுக்கான தீர்வு என்பது இணைக்கப்படாத வடக்கு கிழக்கிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் உரத்து சொல்கிறோம்.

முஸ்லிம்களுக்கும் சமஷ்டி வழங்கத் தயார் என வடக்கு முதலமைச்சர் கூறியுள்ளார். ஆனாலும் அந்த சமஷ்டிஎன்பது இணைந்த வடக்கு கிழக்கிலா அல்லது பிரிந்த வடக்கு கிழக்கிலா என தெளிவாக சொல்லாமல் மறைத்ததன் மூலம் முஸ்லிம்களுக்கும் சமஷ்டி என்பது அறுவைக்காக கொண்டு செல்லப்படும் ஆட்டுக்கு காட்டப்படும் அகத்திக்கீரையாகவே விக்னேஸ்வரனின் முஸ்லிம்களுக்கும் சமஷ்டி என்பதை நாம் பார்க்கிறோம். முஸ்லிம்களுக்கு எத்தகைய தீர்வுத் திட்டம் தேவை என்பதை உலமா கட்சி தெளிவாக சொல்லியுள்ளது. எக்காரணம் கொண்டும் வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடாது என்பதே உலமா கட்சியின் நிலைப்பாடாகும்.

ஆனாலும் தமிழ் மக்களுக்கான தீர்வு தேவை என்ற வகையில் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் பெரும்பான்மை பிரதேசங்களை இணைத்து தமிழர்களுக்கென சமஷ்டி வழங்கலாம். அதற்கு நாம் எதிர்ப்பல்ல. ஆனால் அவ்வாறான பட்சத்தில் கிழக்கில் உள்ள முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களையும் வடக்கில் உள்ள முஸ்லிம்கள் விரும்பும் பட்சத்தில் அவர்களின் பெரும்பான்மை பிரதேசங்களையும் இணைத்து தனியான சமஷ்டி முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதனை விக்னேஸ்வரன் ஏற்பாரா என கேட்கிறோம் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் உலமா கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத்.

## 13 இல் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு
# மாற்றமாகக் கொண்டுவரப்படும் எத் தீர்மானத்துக்கும் ஆதரவளியோம்
## மத்திய மாகாண முதலமைச்சர்



**(வத்துகாமம் நிருபர்)**

தேசிய அபிவிருத்தி சட்டமூலம் நாட்டுக்கு நன்மை பயக்கும் ஒரு சட்ட மூலமாக இருப்பின் எதிர்காலத்தில் அது தொடர்பாக மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா தெரிவித்தார். கண்டியில் வைத்து ஊடகங்களுக்கு அவர் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது

'தேசிய அபிவிருத்தி சட்டமூலம்' தொடர்பாக மாகாண சபைகள் இன்னும் அங்கீகாரம் வழங்கவில்லை என்றும் ஆனால் அது நாட்டுக்கு நன்மை செய்யக் கூடிய ஒன்று எனின் அது தொடர்பாக மாகாண சபை என்ற வகையில் அதனை நிறைவேற்ற ஆதரவு தெரிவிக்கப்படும்.

அத்துடன் சகல உள்ளூராட்சி அமைப்புக்களதும் அதிகாரங்கள் மாகாண சபை முதலமைச்சர்களுக்கே இது வரை இருந்து வந்துள்ளதாகவும் அவற்றை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்குவதால் என்ன நடக்கும் என்பதை ஆராயவேண்டியுள்ளதாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா தெரிவித்தார்.

மேற்படி பிரச்சினையின் போது மட்டுமல்ல எந்தப் பிரச்சினையின் போதும் நாம் பொது மக்களின் பக்கமே முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். மக்களது முடிவு சார்பானதா இல்லையா என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இன்று அரசியல் வாதிகள் அடிக்கடி குறிப்பிடும் விடயம் மாகாண சபைகளுக்கு 13ம் திருத்தத்திற்கு அப்பால் அதிகாரங்களை வழங்குவதாகும். அப்படியாயின் அதனை அமுல்படுத்தும் போது நிதித் தேவைகள் ஏற்படும். மாகாண சபைகளுக்கு வருமானம் ஈட்டும் ஒரு துறையை வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்கினால் எப்படி மாகாண சபையை நிலையாக வைத்திருப்பது என்பது சிந்திக்கப்பட வேண்டும். மக்கள் சார்பாகச் சிந்தித்தால் மக்களது தேவைகளை கைவிடுவதாக அது அமைகிறதாக நான் கருதுகிறேன். மாகாண சபைகளுக்கு கூடிய அதிகாரங்களை வழங்குவது அத்துடன் அரசியல் அமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்து அதிகாரங்களை அதிகரித்தல் போன்ற விடயங்கள் பற்றிப் பேசப்படும் இக்காலக்கட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் விடயமாக அதில் தலையீடுகளை மேற்கொள்வதென்றால் அது பொருத்தமற்றது. முதலமைச்சர்கள் என்ற வகையில் அதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மேற்கொள்ளும் மாற்றங்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். உள்ளூராட்சி அமைப்புக்களது விடயங்களில் கவனமெடுக்கும் பொறுப்பு எமக்குண்டு. உள்ளூராட்சி அமைப்புக்களைப் பாதுகாக்கும் ஒரு கடமையும் எமக்குண்டு.

அரசியல்அமைப்பின் 13ஆவது திருத்தத்தின் படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மாற்றமாக கொண்டு வரப்படும் எந்த ஒரு தீர்மானத்திற்கும் நாம் ஆதரவு வழங்க மாட்டோம்.




# சிதைந்த உடலைக் குளிப்பாட்டல்

**கேள்வி:** ஒரு முஸ்லிமின் உடல் எரிக்கப்பட்டு எலும்பு மாத்திரம் எஞ்சி இருக்கும் போதும், உடல் எரிகாயத்துடன் இருக்கும் போதும் அதனைக் குளிப்பாட்டுவது போன்ற ஜனாஸாவுக்கான கடமைகளை நிறைவேற்ற வேண்டுமா?

**பதில்:** உடலின் ஒரு பகுதி எஞ்சி இருப்பினும் அதனைக்குளிப்பாட்ட வேண்டும், கபனிடவும் தொழுவிக்கவும் வேண்டும் என்பது இமாம்களான ஷாபிஈ, அஹ்மத், இப்னு ஹஸ்ம் போன்றோரின் கருத்தாகும்.

ஒரு முஸ்லிமான மையித்தின் கை,கால் போன்று ஓர் உறுப்பு மாத்திரமே காணப்படினும், அதனைக் கழுவியே அடக்கம் செய்யவேண்டும் என்பது அறிஞர்கள் பலரின் தீர்ப்பாகும். ஜமல் யுத்தத்தின்போது இறந்த ஒரு மனிதரின் கையொன்றை ஒரு பறவை தூக்கிச் சென்று மக்காவில் எறிந்தது. அதிலிருந்த மோதிரத்தைக் கொண்டு குறித்த நபரை இனங்கண்டு, அதனைக் கழுவி, தொழுவித்து அடக்கம் செய்தனர். இது பல ஸஹாபாக்கள் முன்னிலையில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தைத் தான் கேள்விப்பட்டதாக இமாம் ஷாபிஈ அறிவிக்கின்றார்.

அபூ அய்யூப் (ரலி) அவர்கள் ஒரு காலுக்கும், உமர் (ரலி) அவர்கள் ஓர் எலும்புக்கும் தொழுகை நடத்தியுள்ளார்கள் எனத் தெரிய வருகின்றது.

(ஆதாரம்-அஹ்மத்) உடலின் அரைப்பாகத்துக்கு மேல் எஞ்சி இருந்தாலேயே அதனைக் குளிப்பாட்டவும், அதற்காகத் தொழுகை நடாத்தவும் வேண்டும் என்பது இமாம்களான அபூஹனீபா, மாலிக் ஆகியோரினது அபிப்பிராயமாகும்.

நீர் கொண்டு கழுவுவதனால் உடல் சிதையும் என்றிருப்பின் தயமமும் செய்விக்கலாம் என்று கருதும் அறிஞர்களும் உள்ளனர்.

# இன நல்லுறவுக்கு இஸ்லாத்தின் போதனைகள்



நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலம், அதற்கு முன் மற்றும் பின்னைய காலம் தொட்டு தற்காலம்வரை முஸ்லிம்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடுகளில் முஸ்லிம்கள் அநியாயமாக கொன்றுகுவிக்கப்படுகின்றனர். சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என்ற பாகுபாடின்றி அப்பாவிகள் கொன்று குவிக்கப்படுகிறார்கள்.

முஸ்லிம்கள் சிறுபான்மையினராகவோ பெரும்பான்மையினராகவோ வாழ்ந்த போதிலும் பிற சமூகத்தவர்களது மத கலாச்சார தனித்துவங்களை கொச்சைப்படுத்தாமல் அவர்களுடன் சகிப்புத்தன்மையோடு, சமாதானமாக, சகவாழ்வைப் பேணி வாழும்படியே இஸ்லாம் கட்டளையிடுகிறது. அல்லாஹ் தஆலா அல்குர்ஆனில் பிற தெய்வங்களை ஏசக்கூடாது என்ற அமைப்பில் பின்வருமாறு கூறுகிறான் ''பிறர் வணங்கும் தெய்வங்களை ஏசலாகாது'' (06:108)

அதே போன்று அல்லாஹ் மேலும் கூறுகிறான் ''பிற சமயத்தவர்கள் அல்லாஹ்வையோ அவர் தூதரையோ விமர்சிக்கும் போது அவற்றை வன்முறையாலும் கடும் சொற்களாலும் எதிர்கொள்ளாமல் மிகவும் அழகியவழி முறைகள் மூலமே எதிர்கொள்ள வேண்டும்'' (23:96) (41:34) என்று அல்லாஹ் தஆலா பிற சமூகத்தவர்கள் அல்லாஹ்வை, அவனது தூதரை விமர்சிக்கின்ற போது நாம் அமைதியாக இருந்து அழகிய வார்த்தைகள் மூலம் அவர்களை உபதேசிக்க வேண்டும் அல்லது மௌனமாக இருந்து இஸ்லாத்தின் பண்பாடுகளை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அப்படி உணர்த்தும் சந்தர்ப்பத்தில் அவர்கள் அதனை விட்டு ஒதுங்குவதை காணலாம்.

விதண்டாவாதம், குதர்க்கம், மனதைப் புண்படுத்தும் வார்த்தைகள் என்பவற்றைத் தவிர்த்து பண்பாடான முறைகளிலேயே உரிமைப் போராட்டங்கள், கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற வேண்டும். அப்படியல்லாத அணுகுமுறைகள் முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் நபி (ஸல்) அவர்கள் ஹுதைபியா உடன்படிக்கையின் போது முஸ்லிம்களுக்கு பாதகமான விடயங்களை ஏற்று அதற்கு சம்மதித்து பிரச்சினைகள் சுமுகமாக முடிந்ததை நாம் வரலாற்றின் மூலம் அறிந்துள்ளோம். அத்தோடு ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் மரணித்து அவர்களை நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லும் போது எழுந்து நின்று மரியாதையும் செலுத்தியுள்ளார்கள்.

எனவே இவ்வாறான நபிகளாரின் இணங்களுக்கிடையான நட்புறவின் காரணமாக இஸ்லாம் மார்க்கத்தை ஏனைய மதத்தவர்கள் மதித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சகோதர இனங்களைச் சேர்ந்த முஸ்லிம் அல்லாத சகோதரர்களுக்கு எவ்வகையிலும் இடையூறுகளை ஏற்படுத்தாமல் எம்மால் முடியுமான உதவிகளைச் செய்து அவர்களுடனான உறவுகளை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் முஸ்லிம் வியாபாரிகள் தமது வியாபாரத்தில், கொடுக்கல் வாங்கல்களின் போது நம்பிக்கையுடனும் நடப்பதும் அரச மற்றும் தனியார் துறைகளில் தொழில் புரிபவர்கள் குறித்த நேரத்திற்கு சென்று தமது கடமைகளை சரிவரச்செய்வதும் எமது இனத்திற்குக் கிடைக்கும் பெரும் வெகுமதியாகும். இப்படியான செயற்பாடுகள் மூலம் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சகோதர இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ வழி வகுக்கும். அல்லாஹ்தஆலாவும் நபி (ஸல்) அவர்களும் காட்டித்தந்த வழிமுறையில் நடப்போமானால் நாட்டை இனப்பிரச்சினையற்ற நாடாக மாற்றி சகோதர இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ வழி வகுக்கும். எனவே அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரிவானாக!

# பண்பாடுகளின் எழுச்சி

மனித இன வரலாற்றில் பல சமூகங்கள் தோன்றி மறைந்துள்ளன, பல நாகரிகங்கள் உருவாகி அழிந்துள்ளன. இவற்றின் எழுச்சிக்கு துணைநின்ற காரணிகளையும் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்த அம்சங்களையும் ஆராயும்போது ஒரு முக்கிய உண்மை புலனாகிறது. ஒரு சமூகம் அதற்கேயுரிய ஒழுக்க விழுமியங்களிலும் பண்பாடுகளிலும் நிலைத்து நின்றபோது அந்த சமூகம் வாழ்வாங்கு வாழ்ந்திருக்கின்றது. வளமுடன் விளங்குகின்றது. உலக நாகரிகத்திற்கு தனது உன்னத பங்களிப்பைச் செலுத்தியிருக்கின்றது. ஆனால் அச்சமூகம் தனது ஒழுக்க மாண்புகளையும் தான் கடைப்பிடித்து வந்த பண்பாடுகளையும் கைவிடுகின்ற போது அது படிப்படியாக வீழ்ச்சியடைந்து அடையாளம் தெரியாமல் மறைந்து விடுகின்றது.

முஸ்லிம் சமூகம் இஸ்லாத்திலும் அதன் உயரிய பண்பாடுகளிலும் குணவொழுக்கங்களிலும் உறுதியாக நின்ற காலத்தில் அது ஓர் உலகளாவிய சாம்ராஜ்யத்திற்கு பாத்தியதையுடையதாக விளங்கியது. ஆனால் என்று அதன் பண்பாடுகளில் பலவீனம் தோன்ற ஆரம்பித்ததோ அன்று அதன் வீழ்ச்சியும் தொடங்கியது. இன்றுவரை அவ்வீழ்ச்சியை தடுத்துநிறுத்த முடியவில்லை. ஆனால் துரதிஷ்டம் யாதெனில் முஸ்லிம் சமூகம் இன்னும் இந்த அடிப்படை கோளாரை சரியாக இனங்கண்டு கொண்டதாக இல்லை என்பதுதான். இதனால் இஸ்லாத்தின் மீளெழுச்சிக்கான முயற்சிகளிலும் இவ்வம்சம் உரிய இடத்தையும் முக்கியத்துவத்தையும் பெறாமல் இருந்து வருகின்றது.

இன்று நாம் உலகளாவிய ஓர் இஸ்லாமிய மறுமலர்ச்சியைக் காண்பது உண்மை. ஆனால் இங்கு அஹ்காம் எனும் சட்டங்களைப் பேணுவதில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி அக்லாக் எனும் பண்பாடுகளையும் ஒழுக்கங்களையும் கடைப்பிடிப்பதில் உருவாகியுள்ளதாக தெரியவில்லை. தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் முதலான கடமைகளுடன் தொடர்புடைய அஹ்காம்களை அலட்டிக்கொள்ளும் அளவுக்கு அவற்றின் மூலம் பெறப்பட வேண்டிய அக்லாக்களைப் பற்றி நாம் கரிசனை கொள்வதில்லை.

எமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப உறவுகளிலும், சமூகத் தொடர்புகளிலும் பேணப்பட வேண்டிய பண்புகள் பல புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்படுகின்றது. குறிப்பாக எமது இளைய தலைமுறையினர் பண்பாட்டுப் பயிற்சிகளைப் பெறாத நிலையில் வளர்ந்து வருகின்றனர். வீடு, பாடசாலை, மஸ்ஜித், வீதி முதலான இடங்களில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைக்கூட தெரியாத நிலையில் சமூகத்தில் பலர் இருந்து வருகின்றனர். ஒரு காலத்தில் முழு உலகிற்கும் பண்பாட்டை, நாகரிகத்தை வழங்கிய ஒரு சமூகத்தின் நிலை இன்று இவ்வாறு மாறியுள்ளமை எவ்வளவு கவலைக்குரியது?! நம்பிக்கை, நாணயம், வாய்மை, வாக்கு மாறாமை, நேரந்தவறாமை, ஒழுங்கு, கட்டுப்பாடு, பிறர் நலன் பேணல் போன்ற உயரிய இஸ்லாமிய குணப் பண்புகள் எம்மை விட்டு விடைபெற்று சென்றுவிடுமோ என நினைக்கத் தோன்றுகின்றது. எமது சமூகத்தின் தனி மனிதர்களின் ஒழுங்கற்ற நடத்தைகள் முழு சமூகத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்தி வருகின்றன.

எமது சமூகத்தில் ஒரு பண்பாட்டுப் புரட்சியையே செய்ய வேண்டியுள்ளது. எமது தஃவாக் களங்களை இவ்வம்சத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பயன்படுத்த முயல்வது இன்றைய காலத்தின் தேவையும் சன்மார்க்கக் கடமையுமாகும். இல்லாதபோது எம் சமூகத்தின் வீழ்ச்சியை அல்லாஹ் நாடினாலன்றி, எவராலும் தடுத்துநிறுத்த முடியாமல் போய்விடும்.

# பல்கலைக்கழகமும் முஸ்லிம் மாணவிகளும்



**சப்னா செய்னுல் ஆப்தீன்**

கொழும்பு பல்கலைக்கழகம்

பல்கலைக்கழகம் என்பது ஒரு நுழைவாயிலே தவிர அது கட்டிடமல்ல. ஓர் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் அங்கு புத்திஜீவிகள் இருந்து மட்டும் போதாது அவர்கள் புத்திசாலித்தனமாகவும் செயற்பட வேண்டும்.இலங்கையில் உயர்தரம் எழுதும் மாணவர்கள் 300000 பேர் எனில் அதில் பல்கலைக்கழகம் தெரிவாகுபவர்கள் 25000 மாணவர்கள். அந்த கடலில் அண்ணளவாக 1200 முத்துக்கள்தான் முஸ்லிம்கள்.

நாட்டில் 10% வீதம் என்றால் நம் பல்கலைக்கழக நுழைவு 3-4 % ஆகவே இருக்கிறது.இப்படி தெரிவாகும் முஸ்லிம் மாணவர்கள் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைகுழுவால் அனுமதிக்கப்பட்ட 15 பல்கலைக்கழகங்களுக்கும், மருத்துவம், பொருளியல், முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் கலை போன்ற பீடங்களுக்கும் பிரித்து அனுப்பப்பட்டால் அங்கு நம்மவர்களின் எண்ணிக்கையை கைகளுக்குள் அடக்க முடியும் என்பதை அறிவுபூர்வமாக சிந்திப்போர்க்கு தெளிவாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

முஸ்லிம்களின் அனுமதியே இவ்வாறு இருக்க இங்கு சீரழிவு என்றால் என்ன நியாயம். இங்கு தனிப்பட்ட ஒவ்வொருவரும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே தவிர பொதுவாக பேசும் விடயமோ பிறரை சாடவேண்டிய விடயமோ அல்ல.

பல்கலைக்கழகம் வருபவர்கள் அங்கு வந்து தான் கலாசாரத்தை சீரழிக்க வேண்டும் என்பதில்லை அவர்கள் எங்கிருந்தாலும் அது நிகழும் இதில் பல்கலைக்கழகத்தை குற்றம் சாட்டுவது நியாயமானதல்ல. அது அவரவர்களின் தனிப்பட்ட விடயம்.

சீரழிவு என்றால் அது பல்கலைக்கழகம் தான் என்ற கருத்து இன்னும் உயிருடன் வாழ காரணம் உயிரற்ற நம்மவர்களின் விமர்சனங்கள் தான்.இப்படி பேசிப் பேசித்தான் பல்கலைக்கழகம் தெரிவாகும் மாணவர்களும் அதன் வாசத்தை நுகராமல் விலகி நிற்கின்றனர். இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் சில வருடங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் முஸ்லிம் மாணவர்களுக்கான சலுகைகள்,வசதிகள் என்பவை காணாமல் போய் அதற்காக கோஷமெழுப்ப வேண்டி வரும்.

அது மட்டுமல்ல நாளைய சமூகம் வீட்டுக்குள் ஒடுக்கப்பட்டு திறமைகள் மண்ணோடு புதைக்கப்பட்டு இருளுக்குள் மூழ்கி மூச்சுத்திணறும் போது வருந்திப் பயனிருக்காது. செத்து மடிந்த பின் எதற்கு இரங்கல் கவிதைகள்.பின்னோக்கி பயணித்துக்கொண்டிக்கும் பல்கலைக்கழக நுழைவு விகிதம் முன்னோக்கி செல்ல நம்மவர்கள் விளக்கு பிடிக்க தேவையில்லை. இருக்கும் விளக்குகளை அழிக்காமல் இருந்தாலே போதும்.பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவிகள் மட்டுமா இருக்காங்க?? மாணவர்கள் இல்லயா?.... பல்கலைக்கழகங்களில் முஸ்லிம் மாணவர்களின் நிலை பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை? அவர்களின் நடத்தையில் நூறு வீதம் சரிகாணுவதாலா?....பெண்களை பற்றி விமர்சிப்பது அவ்வளவு சந்தோசம் நம்மவர்களுக்கு இதை பார்க்கும் போதே புரிகிறது நம் சமூகத்தின் நாளைய எதிர்காலம்.....??

இன்னுமொரு கவலையான விடயம் என்னவென்றால்.முஸ்லிம் மஜ்லிஸ் இதை கவனிக்க மாட்டாங்களா? என்று நாகூசாமல் கேள்வி வேறு..உங்களிடம் ஒரே ஒரு கேள்வியை கேட்கிறேன்.ஏன் நீங்க இத கவனிக்க மாட்டீர்களா? முஸ்லிம் மஜ்லிஸ் மட்டுமா இதற்கு பொறுப்பாகிறது.

முஸ்லிமாய் பிறந்த அனைவருக்கும் இஸ்லாஹ் மற்றும் தஃவா கடமை அதை மறந்து யாரும் பேச வேண்டாம் என்பது எனது வேண்டுகோள்.அத்துடன் யாராக இருந்தாலும் ஒரு தவறு நடக்கும் போது அறிவுரை கூறி அதன் பிரதிகூலங்கள் அதனால் எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எடுத்துக்கூறத் தான் முடியும். அதை எடுத்து நடப்பது தனிப்பட்ட ஒவ்வொருவரையும் சாரும். இது இப்படியிருக்க முஸ்லிம் மஜ்லிஸை குற்றம் சாட்டுவது முறையல்ல.

தக்வா தனிப்பட்ட ஒவ்வொருவரிடமும் வர வேண்டும். பிறரிடத்தில் அதை ஏற்படுத்த முயற்சிகள் செய்யலாம். ஆனால் அதை தன்னுள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது அவரவருக்கு உரிய தனிப்பட்ட விடயம். வெளியில் இருப்போர் ஒருவரின் செயற்பாடுகளை வைத்தே அவரை விமர்சிக்க முடியும். ஆனால் அதன் உண்மை தன்மையின் நிலைப்பாடு விமர்சிக்கப்பட்டவருக்கு மட்டுமே தெரிந்திருக்கு.ம் உள்ளங்களை அறிந்தவன் இறைவன் மட்டுமே. அடுத்த விடயம் தான்.. பெண்கள் பல்கலைக்கழகம் வரும் போது நிகாஹ் செய்து அனுப்பப்பட வேண்டும் என்ற கருத்து.ஏன் நிகாஹ் செய்து விட்டு வருவோர் தவறுகள் செய்வதில்லையா?. இங்கு அவரவர்க்கு அவரவர்களே பொறுப்பாளர்கள் ஆகிறார்கள். இந்தக் கருத்து பொறுத்தமில்லாத தொன்றாகும்.

முகவரியில்லா கடிதங்களாய் வளம் வரும் சிலரின் வீண் விதண்டாவாதங்கள், தர்க்கங்கள், விவாதங்கள்,விமர்சனங்களை தூக்கி எறிந்து நாளைய இளைய சமூதாயம் ஆரோக்கியமான ஒரு சமூகமாக, அறிவுப்பூர்வமாக சிந்திக்க்கூடிய புதிய வரலாறு படைக்க கூடியவர்களாயிருக்க எழுத்துக்கள் வழிகாட்டட்டும்.

## கல்விச் சுரங்கம்

எம்.றிஷாட்

### பரீட்சைக்கு இலகுவாக படிப்பது எப்படி?

★ அமைதியான சூழலில் படியுங்கள். உங்கள் எண்ணம் சிதறாமல், கவனம் திசை திரும்பாமல் இருக்கும்.

★ அட்டவணை போட்டு படிக்க துவங்குகள். அன்றைய தினம் என்னென்ன பாடங்கள் அட்டவணையில் உள்ளதோ, அதை அன்றே முடித்து விடுங்கள்.

★ சிலருக்கு அதிகாலை படிக்க பிடிக்கும் சிலருக்கு நள்ளிரவு படிக்க பிடிக்கும். உங்களுக்கு எந்த நேரம் சரியாக உள்ளது என்று ஆராய்ந்து படிக்கவும்.

★ ஒரே நேரத்தில், இரண்டு வேலைகளை பார்க்கும் மனப்பான்மையை மாற்றுங்கள். ஒரு வேலையை செய்யுங்கள். அதை ஒரு மனதாக செய்யுங்கள்.

★ பெரிய வினாவை படித்தவுடனோ; எழுதியவுடனோ சிறிது இடைவெளி எடுக்கலாம். அது, மூளையை சோர்வடையாமல் காக்கும்.

★ படிக்கும் நேரத்தில் வேறு சிந்தனைகளையோ, மனதில் ஓட்டாதீர்.

★ பிடிக்காத பாடத்தையும், விருப்பத்துடன் படிக்க பழகுங்கள். நடைமுறை வாழ்க்கையில் உள்ள சம்பவங்களுடன், ஒப்பிட்டு பாடங்களை படித்தால் எளிதில் புரியும்.

★ பாடத்தை குறிப்பெடுத்து படித்தால், ரிவைஸ் செய்வதற்கு உதவியாக இருக்கும்.

★ ஒரு பாடத்தை 2 அல்லது 3 முறை திரும்பி பார்த்தால் மட்டுமே, மனதில் நன்கு பதியும்.

★ படித்து முடித்த பின், எழுதிப் பார்க்கலாம். அல்லது நண்பர்களுடன், படித்ததை கலந்து ஆலோசிக்கலாம். அவ்வாறு செய்தால், அவர்களிடமிருந்து நாம் படிக்காத சில தகவல்களையும் பெறலாம். சந்தேகங்களையும் தீர்க்கலாம்.

## பசுமை ஊக்குவிப்பு திட்டம் இன்று அங்குரார்ப்பணம்

பசுமை ஊக்குவிப்பு என்ற திட்டத்தை, மாகாண சபைகள் அமைச்சு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்பொருட்டு ஆரம்ப முன்னுதாரண வேலைத்திட்டத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் நடவடிக்கை இன்று (13) ரோயல் கல்லூரியில் நடைபெறும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலை மாணவர்களை டெங்கு போன்ற தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கழிவுப் பொருட்களை பயன்படுத்தி உயர் வாயுவை தயாரித்து தேசிய மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தும் நோக்கிலும் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துருக்கி முஸ்லிம்கள் வசமாதலும் கிலாபத்தின் வீழ்ச்சியும்

தொடர் - 2

## நவீன துருக்கி

### மதச்சார்பின்மையிலிருந்து இஸ்லாமியவாதத்தை நோக்கி

**அஷ்கர் தஸ்லீம்**

நபிகளார் முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவில் நிறுவிய இஸ்லாமிய தேசம், அவர்களது மரணத்துக்குப் பின்னர், நேர்வழி நடந்த குலபாஉர்ராஷிதூன்களால் வழிநடத்தப்பட்டது. பின்னர், உமையா வம்சம், அப்பாஸிய வம்சம், உஸ்மானிய வம்சம் என்பன முறையே முஸ்லிம் உலகை ஆட்சி செய்தன.

குலபாஉர் ராஷிதூன்களுக்குப் பிற்பட்டவர்களின் ஆட்சி முறை, சீரான இஸ்லாமிய ஆட்சி முறைமையை விட்டும் விலகிச் சென்றபோதும், பேரளவில் அவை இஸ்லாமிய ஆட்சியின் நீட்சியாகவே அமைந்திருந்தன.

இவ்வாறு தொடர்ந்த இஸ்லாமிய ஆட்சியின் கீழ் உலகின் பல நிலப்பரப்புக்கள் வெற்றிகொள்ளப்பட்டு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டன. இந்தத் தொடரில் தற்போது துருக்கியின் மாபெரும் நகரமான இஸ்தான்பூல் வெற்றிகொள்ளப்பட்டமை வரலாற்றில் மிக முக்கியமானதொரு நிகழ்வாக அடையாளப்படுத்தப்படுகின்றது.




உஸ்மானிய சுல்தான் இரண்டாம் முஹம்மத் 1453 மே 29 ஆம் திகதி கொன்ஸ்தாந்துநோபிளை (தற்போதைய இஸ்தான்பூல்) கைப்பற்றினார். இது உலக வரலாற்றில் மத்திய காலம் என அறியப்பட்ட காலத்தின் முடிவு காலம் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

கொன்ஸ்தாந்துநோபிளின் வெற்றி நபி (ஸல்) அவர்களால் எதிர்வு கூறப்பட்டிருந்தது. எனவே, அந்த எதிர்வு கூறலை நிறைவேற்றுபவர் தானாக இருக்க வேண்டும் என்று பலரும் முயற்சித்து வந்தனர். ஆனால், அந்த எதிர்வு கூறலை நிறைவேற்றும் சந்தர்ப்பம் சுல்தான் இரண்டாம் முஹம்மதுக்குத் தான் கிடைத்தது. கொன்ஸ்தாந்துநோபிள் வெற்றி கொள்ளப்பட்டதனால், வெற்றியாளர் என்ற கருத்தைக் கொண்ட 'ஃபாதிஹ்' என்ற அரபு மொழி பெயர் கொண்டு அவர் அழைக்கப்படலானார்.

இந்த வெற்றிக்குப் பின்னர் துருக்கி முழுவதும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இருபதாம் நூற்றாண்டு வரை துருக்கியில் இஸ்லாமிய கிலாபத் நிலவி வந்தது. இருப்பினும், பல உள்ளார்ந்த மற்றும் வெளிக் காரணங்களினால் பலவீனமடைந்திருந்த துருக்கியின் கிலாபத், 1924 மார்ச் 02 ஆம் திகதி முஸ்தபா கமால் என்ற இராணுவ வீரரால், இரத்துச் செய்யப்பட்டு, துருக்கி ஒரு மதச்சார்பற்ற குடியரசாக மாற்றப்பட்டது.

முஸ்தபா கமால் மேற்கத்தேய மதச்சார்பற்ற சிந்தனைப் போக்கைக் கொண்டவர். இவருக்கு யூதர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. இஸ்லாம் என்பதற்குப் பதிலாக துருக்கியர் என்ற தேசியவாதத்தை அவர் முன்னுரிமைப்படுத்தினார். துருக்கி ஒரு ஐரோப்பிய நாடு என்றும், அதன் கலாசாரம் ஐரோப்பியப் பாணியில் அமைய வேண்டும் என்றும் அவர் திட்டமிட்டார்.

இதன்படி துருக்கியை மொத்தமாகவே மதச்சார்பற்ற நாடாக மாற்றுவதற்கு அவர் நாடினார். எனவே, துருக்கிய மக்களை இஸ்லாத்தோடு இணைத்திருந்த பல விடயங்களை அவர் தடை செய்தார். அதன் மூலம் துருக்கிய மக்களை இஸ்லாத்தை விட்டும் தூரமாக்கலாம் என்று அவன் கருதினார். அவர் இல்லாதொழித்த சில விடயங்கள் கீழே:



1. ஷரீஆ சட்டங்களுக்குப் பதிலாக மேற்கத்தேய சட்டங்கள்

ஒரு நாட்டின் சமூகத்தை நெறிப்படுத்தும் வேலையை அந்நாட்டு சட்டங்கள் மேற்கொள்கின்றன. இந்த சட்டங்கள் சமூகத்தின் போக்கையும் பண்பாடுகளையும் தீர்மானிக்கின்றன. எனவே, இஸ்லாமிய சட்டங்களுக்குப் பதிலாக மேற்கத்தேய சட்டங்களை கொண்டு வரும்போது, துருக்கியர்களை மதச்சார்பற்றவர்களாக மாற்றலாம் என்று முஸ்தபா கமால் தீர்மானித்தார்.

இத்திட்டத்தின்படி, துருக்கியில் நடைமுறையிலிருந்த இஸ்லாமிய சட்டம் இல்லாதொழிக்கப்பட்டு, மேற்கத்தேய மதச்சார்பற்ற சட்டங்கள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. ஷரீஆ சட்டம் இல்லாதொழிக்கப்பட்ட பின்னர், ஒருவருக்கு ஒரு மனைவியை மாத்திரமே மணம் முடிக்கலாம் என்றானது. பெண்கள் தலையை மறைக்க முடியாது என்ற நிலை தோன்றியது. இஸ்லாமிய சிந்தனையின் அடிப்படையில் அரசியல் கட்சிகளையோ இயக்கங்களையோ ஸ்தாபிப்பது தடை செய்யப்பட்டது.

2. அதான் துருக்கி மொழியில் கூறப்படல்

அரபு மொழியில் சொல்லப்பட வேண்டிய அதான் வசனங்கள் துருக்கிக்கு மொழிபெயர்க்கப்பட்டு, துருக்கி மொழியிலேயே அதான் கூறப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டது.

3. வெள்ளிக்கிழமை விடுமுறை மாற்றப்பட்டு மேற்குலகில் போன்று ஞாயிறு தினம் விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

4. ஹிஜ்ரி கலண்டர் மாற்றப்படல் உமர் இப்னுல் கத்தாப் (ரழி) அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஹிஜ்ரி கலண்டர் முழு முஸ்லிம் உலகிலும் பின்பற்றப்பட்டு வந்தது. முஸ்தபா கமால் இந்தக் கலண்டரை மாற்றி விட்டு அதற்குப் பதிலாக மேற்கத்தேய கலண்டரை அறிமுகப்படுத்தினார்.

இதுபோக இன்னும் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களால் துருக்கிய மக்கள் மொத்தமாகவே மதச்சார்பற்றோராக மாறிவிடுவர் என்றே முஸ்தபா கமால் கனவு கண்டார். ஆனாலும், துருக்கியர்களை இஸ்லாமிய வழிமுறையின்பால் வழிநடத்துகின்ற மிகப் பெரும் பணியை முஜத்தித் இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி செய்து வந்தார்.

துருக்கி போன்ற மிகக் கடுமையான மதச்சார்பின்மையைப் பின்பற்றியதொரு நாட்டில் உண்மையான இஸ்லாமிய எழுச்சியைக் காண்பதென்பது மிக்க ஆச்சரியம்தான். ஏனெனில் துருக்கியிலிருந்த மதச்சார்பின்மை ஐரோப்பாவிலுள்ள மதச்சார்பின்மையை ஒத்ததல்ல.

ஐரோப்பியர்கள் மதச்சார்பின்மை என்பதன் மூலம் அரசியலை விட்டும் மதத்தைப் பிரித்தல் என்பதனையே நாடினர். ஆனாலும், துருக்கியின் மதச்சார்பற்றோர் அத்தோடு நின்று கொள்ளாமல், மதத்தை முழுமையாக எதிர்ப்பதிலேயே தமது மதச்சார்பின்மையைக் கட்டியெழுப்பியிருந்தனர்.

முஸ்தபா கமாலின் காலம் முதல் இன்று வரை தொடரும் இப்பணியை துருக்கிய இராணுவமே மேற்கொண்டு வருகின்றது.

இக்கடும் மதச்சார்பின்மைக்கு மத்தியிலும் இஸ்லாம் நிலைத்து நின்றமைதான் கவனிப்புக்குரிய விஷயம். இஸ்லாமிய சமூகம் மரணித்து விடாது; இஸ்லாம் நிலைத்து நிற்கும் என்பதனையே இது குறித்து நிற்கின்றது.

*****************

**அடுத்த பத்தியில் முஸ்தபா கமாலின் மதச்சார்பின்மையை எதிர்த்துப் போராடிய இமாம் பதீஉஸ்ஸமான் பற்றியும் அவரது சிந்தனை துருக்கியர்களை எவ்வாறு நெறிப்படுத்தியது என்பது பற்றியும் பார்ப்போம்.**

---

# ஸ்ரீ லங்கா சுதந்திர முன்னணி ஐ.தே.கவின் அழுக்குகளை கழுவுகிறது

## தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முஸம்மில்

(அ.அருண் பிரசாந்த்)

புதிய அரசியலமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தை மீறி, நாட்டு மக்களை ஏமாற்றும் வகையில் அரசு செயற்படவுள்ளது என்று தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளரான மொஹமட் முஸாமில் தெரிவித்தார்.

அத்தோடு, ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியானது ஐக்கிய தேசியக் கட்சியின் அழுக்குகளை கழுவும் ஒன்றாக தற்போது மாறியுள்ளதாகவும் அவர் கிண்டலடித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள சுதந்திர முன்னணிக் காரியாலயத்தில் நேற்று ஞாயிறு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசானது இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரவேண்டும் என்று மும்முரமாக செயற்பட்டு வருகின்றது. இதன் பணிகளை மேற்கொள்ளும் ஆறு உபகுழுக்களின் அறிக்கையும் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய அரசமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை. அவ்வாறான சர்ச்சைக்குரிய சரத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை என்று ஒரு தரப்பும் சர்வஜன வாக்கெடுப்பென்பது அரசுக்கு சவாலான ஒன்றாகும்;. எனினும், சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பியின் ஆதரவுடன் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம் என்று இன்னொரு தரப்பும் தற்போது கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கின்றன.

பாராளுமன்றில் வைத்து கடந்த 9 ஆம் திகதி விமல் வீரவன்ஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சபை முதல்வரான லக்ஷ்மன் கிரியெல்ல, புதிய அரசியலமைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவோம் என்று தெரிவித்திருந்தார். அத்தோடு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீரவும் இதே கருத்தைத் தான் தெரிவித்திருந்தார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதாயின் சமஷ்டித் தீர்வு குறித்த சரத்துக்கள் புதிய அரசமைப்புக்குள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியாயின் இந்த அரசு சமஷ்டித் தீர்வினை வழங்கி, நாட்டை பிரிக்கப் போகின்றதா எனும் சந்தேகம் எழுந்துள்ளது. மேலும், சபைமுதல்வரும் வெளிவிவகார அமைச்சரும் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டுள்ளமையால் இது அரசின் நிலைப்பாடு தானா எனும் கேள்வியும் எழுகிறது. இது உண்மையெனில், ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசு மீறுகின்றது என்றே அர்த்தமாகும்.

தேர்தல்காலத்தின்போது புதிய அரசமைப்பு ஒன்று அமைக்கப்படுமானால் ஒருபோதும் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல மாட்டோம் என்று ஜனாதிபதி சிறிசேன தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது இந்த அரசானது அந்த வாக்குறுதியை மீறி நாட்டு மக்களை முட்டாளாக்கியுள்ளது. அதேநேரம், அப்போது இதேநிலைப்பாட்டிலிருந்த சுதந்திரக் கட்சியினர் மற்றும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினர் என எவரும் தற்போது இதற்கு எதிர்ப்பினையும் வெளியிடாமல் இருப்பதும் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சோரம்போய்விட்டார்கள் என்பதையே வெளிக்காட்டுகின்றது. எவ்வாறாயினும் மக்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றார்.



நீர்கொழும்பு, போருதொட்டை அல்-பலாஹ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் அதிபர் ஹுஸ்னி ஷரப் தலைமையில் பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. மேல் மாகாண சபை உறுப்பினர் சகாவுல்லாஹ்வின் அழைப்பில் விஷேட அதிதியாக மேல் மாகாண முதல்வர் இசுறு தேவப்பிரிய பங்கேற்றதுடன், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் நஸ்மிஹார், பாடசாலை SDS, OBA, OGA உள்ளிட்ட ஊர் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்றனர்.

(படம் - இஸ்மத்துள் ரஹ்மான்)

---

# கிழக்கு பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வின்றேல் போராட்டம்

## தென்கிழக்கு பஸ் உரிமையாளர்கள் சங்கம்



(அட்டாளைச்சேனை றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண முதலமைச்சரின் கீழுள்ள கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சினுடைய போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தான் நினைப்பது போன்று கண்மூடித்தனமாக செயற்படுவதாகவும், இதனால் கிழக்கு மாகாண தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் தென்கிழக்கு கரையோர மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயற்பாட்டாளர் எம்.எஸ். பைறூஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (11) அக்கரைப்பற்றில் இடம்பெற்றது போது உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாண முதலமைச்சர் தனது நெருங்கிய நண்பர் ஒருவரை கிழக்கு மாகாண வீதிப்பயண போக்குவரத்து அதிகார சபையின் தலைவராக நியமித்துள்ளார். இவர் தான் தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். இதன்காரணமாக தென் கிழக்கு கரையோர பிரதேசங்களில் தனியார் பஸ் சேவைகளில் ஈடுபட்டு வரும் பஸ் உரிமையாளர்கள் பல்வேறான பிரச்சினைகளுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருகின்றனர், இதற்கென சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு பல முறை கோரிக்கை விடுத்தும், இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. இதுவிடயமாக சம்மந்தப்பட்ட தரப்பினர் தீர்வினை வழங்க தவறும் பட்சத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளோம். கடந்த காலங்களில் இலங்கைப் போக்குவரத்து அதிகார சபையினருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருக்குமிடையில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தும் விடயத்தில் பல்வேறான பிரச்சினைகள் எழுந்தன. இப்பிரச்சினைகளை பல்வேறு தரப்பினருக்கும் அறியப்படுத்தியும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை. இதனால் வாகரை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் இவ்விரு சாராரும் ஒன்றிணைந்த சேவையில் ஈடுபடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதற்கமைவாக எவ்வித பிரச்சினைகளும் இன்றி பொதுமக்கள் சேவை இடம்பெற்று வந்தது. இருந்த போதிலும் அண்மையில் கல்முனையில் இருந்து வாகரை ஊடாக திருகோணமலைக்குச் செல்லும் போக்குவரத்து சேவைக்கு புறம்பாக சொகுசு பஸ் என்ற போர்வையில் இரண்டு புதிய பஸ் வண்டிகளுக்கு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இதனால் ஏலவே இவ்வழி ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்கள் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏற்கனவே சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகளுக்கு போதிய வருமானம் அற்ற நிலையில் புதிய பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுவதால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளதாக தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

# பெயர் மாற்றம்

பொத்துவில் P16, விக்டர் தோட்டம், கிராமப்பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் முகைதீன் கண்டு நசார்தீன் எனும் நான் எனது பெயரை முகைதீன் கண்டு நசார் என மாற்றிக்கொண்டேன் என்பதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்துகிறேன். அத்துடன் இனிவரும் சகல ஆவணங்களிலும் முகைதீன் கண்டு நசார் என கையொப்பமிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

(எம்.கே.நசார்)

# பதவி வெற்றிடங்கள்

## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்

## கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு

## புல்மோட்டை இயந்திர நிலையம் மற்றும் பிரதான அலுவலக பதவி நிலை பதவிகள் (நிரந்தர)

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் நிறுவனம் முழுமையாக அரசுடைமையாக்கப்பட்ட கம்பனியொன்றாகும் என்பதுடன் கனிப்பொருள் அகழ்வு பதனிடல் மற்றும் விற்பனை செய்தல் பிரதான விடயப் பொறுப்பாகும். அரசாங்கத்திற்கு வெளிநாட்டு செலாவணியை உழைத்துக் கொடுக்கும் முதலாம் தர நிறுவனமொன்றாகிய எமது நிறுவனத்தின் தலைமை அலுவலகம் ராஜகிரியவில் அமைந்துள்ளதுடன் உற்பத்தி இயந்திர நிலையம் திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை கிராமத்தில் அமைந்துள்ளது. தற்போது பிரதானமாக கனிப்பொருள் மணல் வேறாக்கிய பின்னர் ஏற்றுமதி செய்யப்படும் என்பதுடன் முன்வரும் காலத்தில் இந்த கனிப்பொருள் மணலுக்கு பெறுமதி சேர்க்கும் விடயமொன்றுக்கு நுழைவதற்கு ஏற்பாடாகியுள்ளது. நிறுவனம் பற்றிய ஏனைய விபரங்கள் எமது நிறுவனத்தின் www.lankaminerlsands.lk இலக்கம் கொண்ட இணையத்தளத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் நிறுவனத்தின் எதிர்காலக் குறிக்கோள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு உதவி வழங்கக் கூடிய கீழ்க் காணும் பதவிகளில் சேவை செய்ய விரும்பும் உத்தியோகத்தர்களுக்கு நிறுவனத்தின் பங்காளியாகுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2/2016 இன் பிரகாரம் சம்பளங்கள் செலுத்தப்படும் என்பதுடன் அதற்கு மேலதிகமாக மனதைக் கவரும் விதத்தில் விசேட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் பலவும் உரித்தாகும்.

**01. பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம் மற்றும் மனித வளங்கள்)**
Deputy General Manager (Administration / Human Resource)

**(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம்** HM - 3)
பதவிகள் எண்ணிக்கை 01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) கல்வி / தொழிற் தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனித வளங்கள் முகாமைத்துவத் துறையில் ஆரம்ப பட்டமொன்றுடன் உரித்துடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டமொன்று (Master's) பெற்றிருத்தல் /உரித்துடைய விடயத்துறைக்கு சரியாகும் விதத்தில், அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற தொழில் நிறுவனமொன்றில் சார்ந்த அங்கத்துவம் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அனுபவம்: அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 17 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

(2) கல்வி / தொழிற் தகைமைகள் - உரித்துடைய விடயத்துறைக்கு சரியாகும் விதத்தில், அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற தொழில் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அனுபவம் - அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 17 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள் - கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்.

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.
(2) சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-1) சேவை தரத்தில் ஆகக் குறைந்தது 2 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
(3) முகாமைத்துவ (MM 1-1) சேவைத் தரத்தில் பதவியொன்றில் 1ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 7 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**02. பிரதி பொது முகாமையாளர் (நிதி)**
Deputy Manager (Finance)
(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் HM 1-3)
வெற்றிடம் நிலவும் இடம் - பிரதான அலுவலகம் - (ராஜகிரிய)
பதவி எண்ணிக்கை -01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) கல்வி / தொழிற் தகைமைகள் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து நிதி மற்றும் கணக்கு துறை பற்றிய பட்டமொன்று பெற்றிருத்தல்.

அத்துடன்

நிதி மற்றும் கணக்கு துறை பற்றிய பட்டப்பின் படிப்பு பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் / பட்டயம் பெற்ற சான்றிதழ் பெற்ற கணக்காளர் சங்கத்தின் சார்ந்த அங்கத்துவம் (ICA / CIMA / ACCA) பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம் : அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 17 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

(2) கல்வி / தொழிற் தகைமைகள்: பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனம் / பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் / பட்டயம் பெற்ற சான்றிதழ் பெற்ற கணக்காளர் சங்கத்தின் முழுமையான அங்கத்துவம் (ICA / CIMA / ACCA) பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம் : அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 17 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

மற்றும்

உள்ளக விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.
(2) சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-1) சேவை தரத்தில் ஆகக் குறைந்தது 2 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
(3) முகாமைத்துவ (MM 1-1) சேவைத் தரத்தில் பதவியொன்றில் 1ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 7 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

HM 1-3 சேவைத் தரத்திற்கு உரித்துடைய சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம்
சம்பளக் குறியீட்டு இலக்கம் HM 1-3 ரூபா 86,865/- 2,270 X 15 120,915/-

2017.01.01 தொடக்கம் கீழ்க்கண்டவாறு சம்பளம் உரித்துடையதாகும்.

| 2017 | | 2018 | | 2019 | | 020 | |
|---|---|---|---|---|---|---|---|
| சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு |
| ரூ.59,793/- | ரூ.301/- | ரூ.68,817/- | ........ | ரூ.77,841/- | ....... | ரூ86,865/- | ....... |

மேலே சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் பொது நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொடுப்பனவுகளும் உட்சேர்க்கப்படும்.

(உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கப்படும் போது இருத்தப்பட வேண்டிய சம்பள படிநிலை தாபன விதிக் கோவையின் V11அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும்)

(பிரதி பொது முகாமையாளர் நிர்வாகம் மற்றும் மனித வளங்கள் பதவிக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் புல்மோட்டை இயந்திர நிலையம் மற்றும் கொழும்பு பிரதான அலுவலகம் ஆகிய இடங்கள் இரண்டிலும் கடமையாற்ற இணங்குதல் வேண்டும்)

வயதெல்லை: 35 வருடங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்குக் கூடாமல் இருத்தல் வேண்டும்.

**03. பிரதான பொறியியலாளர் (பராமரிப்பு மற்றும் சேவை) Chief Engineer (Maintenance and Service)**
(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் HM 1-1)
வெற்றிடம் நிலவும் இடம் - புல்மோட்டை இயந்திர நிலையம் (திருகோணமலை மாவட்டம்)
பதவி எண்ணிக்கை -01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) கல்வி / தொழிற் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் இருந்து இயந்திரவியல் / மின்சாரம் / சிவில் பற்றிய பொறியியல் பட்டமொன்று பெற்றிருத்தல்.

அத்துடன்

இயந்திரவியல் / மின்சாரம் / சிவில் பற்றிய பட்டப்பின் படிப்பு பொறியியல் பட்டமொன்று பெற்றிருத்தல் அல்லது இயந்திரவியல் / மின்சாரம் / சிவில் பொறியியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் சார்ந்த அங்கத்துவம் பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம்: அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

(2) கல்வி /தொழிற் தகைமைகள் - இயந்திர / மின்சார / சிவில் பொறியியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற பொறியியல் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்

மற்றும்

அனுபவம்: அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்.

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.
(2) முகாமைத்துவ (MM 1-1) சேவைத் தரத்தில் 1ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**04. பிரதான பொறியியலாளர் (அகழ்வு மற்றும் பதனிடல்) Chief Engineer (Mining and Processing)**
(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் HM 1-1)
வெற்றிடம் நிலவும் இடம் - புல்மோட்டை இயந்திர நிலையம் (திருகோணமலை மாவட்டம்)
பதவி எண்ணிக்கை -01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்.

(1) கல்வி /தொழிற் தகைமைகள்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து அகழ்வு மற்றும் பதனிடல் பற்றிய பொறியியல் பட்டமொன்று பெற்றிருத்தல்

அத்துடன்

அகழ்வு மற்றும் பதனிடல் பற்றிய பட்டப்பின் படிப்பு பொறியியல் பட்டமொன்று பெற்றிருத்தல் அல்லது அகழ்வு மற்றும் பதனிடல் பொறியியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் சார்ந்த அங்கத்துவம் பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம் : அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

(2) கல்வி / தொழிற் தகைமைகள் : அகழ்வு மற்றும் பதனிடல் பொறியியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற பொறியியல் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம் : அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.
(2) சிரேஷ்ட முகாமைத்துவ (MM 1-1) சேவை தரத்தில் 1ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**05 பிரதான இரசாயனவியலாளர் Chief Chemist**
(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் HM 1-1)
வெற்றிடம் நிலவும் இடம் - புல்மோட்டை இயந்திர நிலையம் - (திருகோணமலை மாவட்டம்)
பதவி எண்ணிக்கை -01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) கல்வி / தொழிற் தகைமைகள் -
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து இரசாயணவியல் பற்றிய பட்டமொன்று பெற்றிருத்தல்.

அத்துடன்

இரசாயனவியல் பற்றிய பட்டப்பின் படிப்பு பட்டமொன்று பெற்றிருத்தல் அல்லது இரசாயனவியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற நிறுவனமொன்றில் சார்ந்த அங்கத்துவம் பெற்றிருத்தல்.

மற்றும்

(2) கல்வித் தகைமைகள் / தொழிற் தகைமைகள் - இரசாயனவியல் துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட பட்டயம் பெற்ற பொறியியல் நிறுவனமொன்றில் முழுமையான அங்கத்துவம் பெற்றிருத்தல்.

அனுபவம் : அரசாங்கத்தில், அரசாங்க கூட்டுத்தாபனமொன்றில், நியதிச் சட்டமுறை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை அறிக்கையொன்று இருத்தல்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.
(2) சிரேஷ்ட முகாமைத்துவ (MM 1-1) சேவை தரத்தில் 1ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் உரித்துடைய விடயத் துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

சேவைத் தரத்திற்கு உரித்துடைய சம்பள குறியீட்டு எண் மற்றும் மாதாந்த சம்பள அளவு
முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம்
சம்பளக் குறியீட்டு இலக்கம் HM 1-1 ரூபா 80,295/- 2,270X15 114,345/-
2017.01.01 தொடக்கம் கீழ்க்கண்டவாறு சம்பளம் உரித்துடையதாகும்.

| 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|
| சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு |
| ரூ.55,236/- | ரூ.1000/- | ரூ.83,569/- | ........ | ரூ.71,942/- | ....... | ரூ80,295/- | ....... |

மேலே சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் பொது நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொடுப்பனவுகளும் உட்சேர்க்கப்படும்.

(உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கப்படும் போது இருத்தப்பட வேண்டிய சம்பள படிநிலை தாபன விதிக் கோவையின் VII அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும்)

வயதெல்லை: 35 வருடங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்குக் கூடாமல் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**06. (உற்பத்தி) பொறியியலாளர் (Production Engineer)**
(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் MM 1-1) ii ஆம் தரம்
வெற்றிடம் நிலவும் இடம் - புல்மோட்டை இயந்திர நிலையம் (திருகோணமலை மாவட்டம்)
பதவி எண்ணிக்கை -01
வெளி விண்ணப்பதாரர்கள்
கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்
கல்வி / தொழிற் தகைமைகள்

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் (உற்பத்தி) பட்டமொன்று.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர் அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபை /அல்லது அங்கிகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்.

2) உற்பத்தி பற்றிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தேர்ச்சிச் சான்றிதழொன்று பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமை பெற்ற பின்னர் அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபை / அல்லது அங்கிகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

கிழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.

(2) சிரேஷ்ட முகாமைத்துவ (JM 1-2) சேவைத் தரத்தில் உரித்துடைய விடயத் துறையில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**07. வழங்கல் முகாமையாளர்**

(முகாமைத்துவ சேவைகள் தரம் MM 1-1) ii ஆம் தரம்

பதவி எண்ணிக்கை -01

வெளி விண்ணப்பதாரர்கள்

கிழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

கல்வி மற்றும் தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து வழங்கல் முகாமைத்துவம் பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று.

மற்றும்

பட்டத் தகைமை பெற்ற பின்னர் அரசாங்க திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபை / அல்லது அங்கிகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்துடைய விடயத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்கள்

கிழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

(1) மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள் பெற்றிருத்தல்.

(2) கனிஷ்ட முகாமைத்துவ (JM 1-2) சேவைத் தரத்தில் உரித்துடைய விடயத் துறையில் ஆகக் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

08. மருத்துவ உத்தியோகத்தர் (Medical Officer)

(சிரேஷ்ட முகாமைத்துவ சேவைகள் தரம் MM 1-1) ii ஆம் தரம்

வெற்றிடம் நிலவும் இடம் - புல்மோட்டை இயந்திர நிலையம் (திருகோணமலை மாவட்டம்)

பதவி எண்ணிக்கை -01

வெளி விண்ணப்பதாரர்கள்

கிழ்க்காணும் தகைமைகளில் ஒன்று பெற்றிருத்தல்

கல்வி / தொழிற் தகைமைகள்

(1) எம்.பி.பி.எஸ். பட்டத்துடன் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல்

ஆர்.எம்.பி. அல்லது சமமான தகைமைகளுடன் மருத்துவராக அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டப் பின் படிப்புத் தேர்ச்சி ஒரு (01) வருட அனுபவம்.

அத்துடன்

மருத்துவ தொழிலொன்றில் சேவையாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

சேவைத் தரத்திற்கு உரித்துடைய சம்பளக் குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் பிரகாரம்.

சம்பளக் குறியீட்டு இலக்கம் MM 1 - 1 ரூபா 58,175/- 1375 X 10 - 1910 X 15 - ரூ.95,575/- 2017.01.01 தொடக்கம் கிழ்க்கண்டவாறு சம்பளம் உரித்துடையதாகும்.

| 2017 | | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|---|
| சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு | சம்பளம் | சீராக்கல் கொடுப்பனவு |
| ரூ.36,654/- | ரூ.4,114/- | ரூ.42,161/- | ....... | ரூ.47,668/- | ....... | ரூ.53,175/- | ....... |

மேலே சம்பளத்திற்கு மேலதிகமாக கிழ்க்காணும் பொது நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கொடுப்பனவுகளும் உட்சேர்க்கப்படும்.

(உள்ளக விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்க்கப்படும் போது இருத்தப்பட வேண்டிய சம்பள படிநிலை தாபன விதிக் கோவையின் VII அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தீர்மானிக்கப்படும்)

(வழங்கல் முகாமையாளர் பதவிக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் புல்மோட்டை இயந்திர நிலையம் மற்றும் கொழும்பு பிரதான அலுவலகம் ஆகிய இடங்கள் இரண்டிலும் கடமையாற்ற இணங்குதல் வேண்டும்.)

வயதெல்லை : 22 வருடங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன் 45 வருடங்களுக்குக் கூடாமல் இருத்தல் வேண்டும்.

செலுத்தப்படும் சம்பளத்திற்கு மேலதிகமாக, கிழ்க்காணும் மாதாந்த கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் உரித்துடையதாகும்.

i. திறைசேரியினால் அங்கிகரிக்கப்பட்ட ரூபா 7800/- ஆகிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு.

ii. நாளொன்றுக்கு ரூபா 150/-கொண்ட மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வருகை மீது அமைவானதாக இருக்கும்.

iii. மாதமொன்றுக்கு ரூபா 2,000.00 உச்சத்திற்கு அமைவாக மாதாந்த வருகை ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வருகை மீது அமைவானதாகும்.

iv. மாதாந்த ரூபா 4,000.000 ஆகிய கஷ்டக் கொடுப்பனவு (புல்மோட்டை இயந்திர நிலைய ஊழியர்களுக்கு மட்டும்)

v. MM1-3 மற்றும்HM1-1 மட்டங்களுக்கு மாதாந்தம் ரூபா50,000/- போக்குவரத்து கொடுப்பனவொன்றும் மற்றும் அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இன் பிரகாரம் எரிபொருள் 120 லீட்டருக்குச் சமமான கொடுப்பனவொன்று.

vi. MM 1-1 மட்டத்திற்கு மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 10,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு.

மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 15,000/ஆகிய பொறியியலாளர்களை இருத்தி வைத்துக் கொள்ளும் கொடுப்பனவு (பொறியியலாளர்களுக்கு மட்டும்)

**ஏனைய நன்மைகள்:**

01. வருடாந்தம் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு.

02. வருடாந்தம் மிகைக் கொடுப்பனவு (போனஸ்)

03. சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் சேர்த்தல் மற்றும் வெளி சிகிச்சைக்கான காப்புறுதிக் காப்பு.

i. வருடமொன்றுக்கு 150,000/- ம் வைத்தியசாலையில் சேர்க்கும் காப்புறுதிக் காப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட்டதாக)

ii. வருடமொன்றுக்கு ரூபா 20,000/ வெளி சிகிச்சை விலைப்பட்டியல்கள் மீள் நிரப்பல் (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட்டதாக)

iii. வருடமொன்றுக்கு ரூபா 5,000/-ம் பற்சிகிச்சை விலைப்பட்டியல்கள் மீள் நிரப்பல் (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட்டதாக)

04. பெற்றுக்கொள்ளாத மருத்துவ விடுமுறைக்கான பணம்.

05. நிலையான (நிச்சயித்த) எல்லை வரை மருத்துவ செலவினம் பெற்றுக்கொடுத்தல்.

i. வருடத்திற்கு ஒரு முறை ரூபா 5,000/- கொடுப்பனவு (பொதுவான மருத்துவக் கட்டணங்களுக்கு)

ii. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ரூபா 12,000/- கொடுப்பனவு (விசேடத்துவ மருத்துவக் கட்டணம், மருத்துவ ஆராய்ச்சிக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல செலவினங்களுக்காக)

iii. குழந்தைப் பிரசவத்திற்காக இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ரூபா 12,000/- கொடுப்பனவு.

06. i. அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை இலக்கம் PED / 2 / 2015 இன் பிரகாரம் HM-2-1, HM - 1-3 மற்றும் HM - 1-1 சம்பள மட்டத்திற்காக மாதாந்தம் ரூபா 9,000/- உச்சத்திற்கு அமைவாக தொலைபேசி மற்றும் தொடர்பாடல் விலைப்பட்டியல் மீள்நிரப்புதல்.

ii. அரச தொழில் முயற்சி சுற்றறிக்கை இலக்கம் ; PED / 2 / 2015 இன் பிரகாரம் MM - 1-1 சம்பள மட்டத்திற்காக மாதாந்தம் ரூபா 5,000/- உச்சத்திற்கு அமைவாக தொலைபேசி மற்றும் தொடர்பாடல் விலைப்பட்டியல் மீள்நிரப்புதல்.

08. ஊழியரினால் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு 10% மற்றும் கம்பனியினால் 15% பங்களிப்பு (ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக 3% உட்பட்டதாக)

09. இதற்கு மேலதிகமாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய நன்மைகள் கிடைப்பதற்கும் உரிமை உண்டு.

**பொது நிபந்தனைகள்:**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.;
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்கள் சிறந்த முறையில் நிறைவேற்றுதல் போன்றே நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு தேவையான உடல் ரீதியான மற்றும் மனோரீதியான ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்புகளில் உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as You Earn - PAYE Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவையில் / கூட்டுத்தாபனங்களில் / நியதிச் சட்டமுறைச் சபைகளில் மற்றும் அரச கம்பனிகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பப் படிவங்களை தமது உரித்துடைய திணைக்களங்களின் / நிறுவனங்களின் தலைவர்களின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலே காண்பிக்கப்பட்டுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்கள் (உரித்துடைய சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளுடன்) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிடப்பட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இலக்கம் 341/21 இல் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் இல் உரிய அதிகாரிக்குக் கிடைக்கக் கூடியதாக 2017 பெப்ரவரி மாதம் 27ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ப.க.பொது முகாமையாளர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்**
**இலக்கம் 341 / 21, சரண மாவத்தை,**
**ராஜகிரிய.**


## பல்கலைக்கழகம் தெரிவாகும்

# முஸ்லிம் பெண்பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்துவது கவலைக்குரியதாகும்

### அக்குறணை சாஹிராவில் உயர்கல்வி அமைச்சர்





**(முஹம்மத் ஆஸிக், இக்பால் அலி)**

முஸ்லிம் சமுதாயத்திலுள்ள பெண் பிள்ளைகள் கல்வித் துறைக்குச் சென்று அதனை முடிப்பதில்லை. கூடுதலாக கல்வியைத் தொடரக் கூடிய பிள்ளைகள் பல்லைக்கழகம் செல்லக் கூடிய பிள்ளைகள் இடை நடுவில் கல்வியை நிறுத்திக் கொள்கின்றனர். அவ்வாறு செய்ய வேண்டாம் என நான் இந்த வேண்டுகோளை முன் வைக்கின்றேன். எம்மிடம் பட்டப்படிப்பு கல்வி இருக்குமானால் அதனை யாராலும் திருட முடியாது. தம்மிடம் சொத்து வத்துக்கள் எல்லாம் இருக்கலாம். ஆனால் அவை அனைத்தும் இல்லாமற் சென்று விடும். எனினும் கல்வியை யாராலும் பறித்துச் செல்ல முடியாது. சிறந்த கல்வியைக் கற்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நவீன உலகின் சாவால்களுக்கு ஏற்ப எமது பெண்பிள்ளைகளின் கல்வி முக்கியத்துவம் வாய்ந்தவையாகும் என்று உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷமன் கிரியெல்லை தெரிவித்தார்.

அக்குரணை சாஹிராக் கல்லூரியின் முப்பெரும் விழா நேற்றுமுன்தினம் பாடசாலையில் அதிபர் ஏ. எஸ். எம். இர்ஷாட் தலைமையில் இடம்பெற்றது. மூன்று கோடி ரூபா செலவில் ஆசிரியர் விடுதி மற்றும் அதிபர் விடுதி நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் தொழில் நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழாவும் மற்றும் இல்ல விளையாட்டுப் போட்டி ஆகிய இங்கு இடம்பெற்றன இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லை இவ்வாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்

விரைவாக முன்னேறும் உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதனுடன் சேர்ந்து போவதற்கு கல்வி அவசியம். எங்களுடைய பிள்ளைகள் தடுப்பதற்கு இல்லை. இது எமது பிள்ளைகளை பாதுகாப்பதற்கான சிறந்த வழிகள் உள்ளன.

அக்குரணைப் பிதேசத்திலுள்ள பாதைகளை அபிவிருத்தி செய்தவற்காக இம்முறை ரூபா மில்லியன் 500 நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. இது அமைச்சர் ஹலீமின் வேண்டுகோளின் பிரகாரம் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. .மேலும் தொடர்ந்து உதவி செய்யத் தயாராக இருக்கின்றோம்.

கொழும்பு கண்டி அதிவேக நெடுஞ்சாலை வீதி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது உங்களுக்கு புலப்படுவதில்லை. கடவத்த இருந்து மீரிகம வரை வேலைகளுக்கான பகுதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீரிகமவிலிருந்து பொத்துஹெர வரைக்குமான வேலைகளுக்கான ஆரம்பம் ஒரு வாரத்திற்கு முன்னர் பிரதமரினால் ஆரம்பிக்கப்பட்டது. மூன்றாவது கட்டம் பொத்துஹரவிலிருந்து கலகெதரை வரைக்குமான வேலை மார்ச் மாதம் ஆரம்பிக்கவுள்ளோம். இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஒரு மணித்தியாலத்தில் கண்டியிலிருந்து கொழும்பு செல்ல முடியும் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். கடந்த அரசாங்கம் இருபது வருடங்கள் செய்த வேலையை நாங்கள் குறுகிய காலத்தில் செய்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் இரண்டாவது வருடத்தில் தான் இருந்து கொண்டிருக்கின்றோம்.

எமது நாட்டில் மக்களுக்கிடையிலான இன நல்லிணகத்தையும் சக வாழ்வையும் மேம்படுத்தவதில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எமது அரசாங்கம் சிங்கள பௌத்த மக்களைப் பாதுகாப்பது போன்று சிறுபான்மையின மக்களையும் பாதுகாப்பதில் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். விசேடமாக கடந்த அரசாங்கத்தில் முஸ்லிம் ,தமிழ், கிறிஸ்தவ ஆகிய மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்தனர். எங்களுடைய நல்லாட்சி அரசாங்கம் வருகை தந்த பின்னர் சிங்கள பௌத்த மக்களைப் பாதுகாப்பது போன்று இந்த வாழும் ஒவ்வொரு மக்களும் இந்த நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சகலரும் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு வழிவகுத்துள்ளோம் என்பதை இந்தச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகின்றேன்.

எமது அரசாங்கம் கல்வித் துறைக்காக கூடுலான பங்களிப்பைச் செய்து வருகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் 13 வருடங்கள் கல்வி பயில வேண்டும் என எமது பிரதமர் தெரிவித்திருக்கின்றார். பிள்ளைகளின் எதிர்காலத் துறைக்கு ஏற்ப நாங்கள் கல்வித் துறையில் மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளோம். இப்பாடசாலையின் தேவையையும் நிறைவு செய்து கொடுப்பதற்கு தயராக இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதில மத்திய மாகாண சபை உறுப்பினர்களாக முத்தலிப் ஹாஜியார், லாபிர் ஹாஜியார், ஹிதாயத் சத்தார், முன்னாள் அக்குரணை பிரதேச சபையின் தவிசாளர் சிம்சான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இங்கிலாந்து பாராளுமன்றத்தில் டிரம்ப் பேச எதிர்ப்பு



இங்கிலாந்து வருமாறு அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு ராணி இரண்டாம் எலிசபெத் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவரது இங்கிலாந்து வருகையின்போது அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் பேசுவார் என தகவல்கள் வெளியாகின.

ஆனால் ஈரான், ஈராக் உள்ளிட்ட 7 நாடுகள் மீது பயண தடை விதித்து டிரம்ப் உத்தரவிட்ட பின்னர் இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றத்தில் அவர் பேசுவதற்கு கடும் எதிர்ப்பு உருவாகி உள்ளது.

பாராளுமன்ற கீழ்சபை சபாநாயகர் ஜான் பெர்கவ்வும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதையடுத்து பாராளுமன்ற கூட்டம் நடைபெறாத காலகட்டத்தில் டிரம்ப் வருகை இருக்குமாறு பார்த்துக் கொள்வது என இங்கிலாந்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டிரம்ப் பயணம் குறித்து பெக்கிங்காம் அரண்மனை மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் விவாதித்து கொண்டிருக்கின்றனர்.

ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில், பாராளுமன்ற கூட்டம் நடைபெறாது கோடை விடுமுறை விடப்பட்டிருக்கும் காலத்தில் டிரம்ப்பின் பயணம் இருக்குமாறு திட்டம் வகுக்கப்படுகிறது. இதனால் அவர் பாராளுமன்றத்தில் பேசும் வாய்ப்பு இருக்காது என தெரிய வந்துள்ளது.

## முடிவுக்கு வராத தமிழக சர்ச்சை

# ஆட்சியமைப்பது யார்? ஓ. பன்னீர் செல்வமா? சசிகலாவா?



(திருச்சி எம்.கே. சாஹுல் ஹமீத்)

தமிழ்நாட்டின் முதலமைச்சு பதவி குறித்த சர்ச்சை தொடர்ந்து வருகின்ற நிலையில், அ.தி.மு.க. பொதுச் செயலாளரான சசிகலா தலைமையில் ஓர் அணியும், முதலமைச்சர் பன்னீர் செல்வம் தலைமையில் இன்னொரு அணியும் உருவாகியுள்ளது. ஓ.பன்னீர் செல்வத்துக்கு இதுவரையில் 10 எம்.பிக்களும், 7 சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதுதவிர கட்சியின் முன்னணி நிர்வாகிகள் பலரும் ஓ. பன்னீர்செல்வத்தின் வீட்டுக்கு சென்று தங்களது ஆதரவை தெரிவித்துள்ளனர். இதனால் அவருக்கு ஆதரவு பெருகி வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தனக்கு ஆதரவான சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்துடன், ஆளுநர் வித்யாசாகர் ராவை சந்தித்த சசிகலா, ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்க கோரியும், அது தொடர்பான அறிவிப்புகள் எதுவும் ஆளுநர் மாளிகையில் இருந்து வெளியாகவில்லை.

எனவே, சசிகலா, ஜெயலலிதாவின் சமாதிக்கு சென்று சட்டமன்ற உறுப்பினர்களுடன் உண்ணாவிரதம் இருப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. இது தொடர்பான ஆலோசனையில் சசிகலா ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று (12) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள சசிகலா, பெண்கள் அரசியலில் இருப்பது மிகவும் கஷ்டம் என்றும், தனக்கு எத்தனை சோதனைகள் வந்தாலும் வென்று மீண்டு வருவேன் என்றும் கூறியுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர், அ.தி.மு.க. இரண்டு முறை தொடர்ந்து வென்று தமிழகத்தில் ஆட்சியை நடத்தி வருகிறது. நடக்கும் நிகழ்வுகளை நான் சொல்லி உங்களுக்கு தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்த சூழ்ச்சியின் பின்னணியில் யார் யார் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியும்.

நான் எழுதியதாகவே கடிதம் ஒன்று சமூக வலைதளங்களில் சுற்றிக் கொண்டிருக்கிறது. நான் ஏதோ உயிரை விட்டுவிடுவேன் என்று ஆளுநருக்கு கடிதம் எழுதியதாக அதில் கூறப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை என் நண்பர் ஒருவர் எனக்கு அனுப்பி பாருங்கள் என்றார். நான் அதனை கையில் எடுத்து வந்துள்ளேன். இதனை எல்லோரும் அவசியம் பார்க்க வேண்டும். இந்தக் கடிதத்தை நான் எழுதவில்லை.

ஒரு பெண் அரசியலில் இருப்பது என்பது மிகவும் கஷ்டமான விஷயம். அதனை ஜெயலலிதா காலத்திலேயே நான் பார்த்திருக்கிறேன். அதிலிருந்து அவர்கள் மீண்டு வந்தார்கள். இப்போது நான் பொதுச் செயலாளராக அ.தி.மு.கவில் பொறுப்பேற்றிருக்கிறேன். இந்த சோதனைகளில் இருந்து நான் மீண்டு வருவேன். - என்றார்

# மத நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்துவத்தை வலியுறுத்துபவர்களுக்கு ஆதரவு கொடுப்போம்

### இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் முகம்மது அபூபக்கர்

(திருச்சி எம்.கே. சாஹுல் ஹமீத்)

இப்போது நடந்து வரும் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி தமிழகத்தில் கால் ஊன்றுவதற்கு, பாரதீய ஜனதா கட்சி முயற்சி செய்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களிடம் குதிரைப் பேரம் நடந்து வருகிறது. இதுவரை யாருக்கும் நாங்கள் ஆதரவு கொடுக்கவில்லை. மத நல்லிணக்கம், சமத்துவம், சகோதரத்தை வலியுறுத்துபவர்களுக்கு ஆதரவு கொடுப்போம் என்று முகம்மது அபூபக்கர் எம்.எல்.ஏ. கூறினார்.

மேலும் தெரிவித்த அவர், தமிழக அரசியலில் ஒரு மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. நிரந்தர முதல்-அமைச்சர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் அ.தி.மு.க.வின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக சசிகலா தேர்வு செய்யப்பட்டு, தனக்கு எத்தனை எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு இருக்கிறது என்ற கடிதத்தை கவர்னரிடம் கொடுத்தார். உடனடியாக அவரை ஆட்சி அமைக்க கவர்னர் அழைத்திருக்கலாம்.



ஆனால் அதை அவர் செய்யவில்லை. முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்துக்கு எத்தனை எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தெரிவித்து இருக்கிறார்கள் என்ற விவரமும் வெளியிடப்படவில்லை. கவர்னர் காலம் தாழ்த்துவது மிகப்பெரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்தார்.

## சவூதியின் முயற்சிகளுக்கு அமெரிக்கா பாராட்டு



பிராந்தியத்தில் அமைதியையும், ஸ்திரத்தையும் ஏற்படுத்த சவுதி மேற்கொண்டு வரும் முன்னெடுப்புக்களை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

நேற்று தோலைபேசி ஊடாக சவுதி மன்னருடன் பேசிய அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் உலகில் சமாதானத்தை நிலை நிறுத்த சவூதி பாரிய பங்களிப்பினை செய்து வருகிறது என சுட்டிக் காட்டினார்.

இந்த உரையாடலின் போது, அரசியல்இ பொருளாதாரம், இராணுவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வரலாற்று ரீதியில் நிலவும் மூலோபாய உறவுகளை பாராட்டிய அமெரிக்க அமைச்சர், இராணுவ ஒத்துழைப்பு, பயங்கரவாதத்திற்கு எதிரான இணைந்த வேலைத் திட்டம், மற்றும் பொருளாதார உறவுகளை இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில் வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

# தடை நீக்க நீதிமன்று மறுப்பு டிரம்புக்கு பின்னடைவு



சிரியா உள்ளிட்ட, ஏழு முஸ்லிம் நாடுகளின் பயணிகள், அமெரிக்காவில் நுழைய, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் விதித்த தடைக்கு, விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்ய, கோர்ட் மறுத்து விட்டது.

சிரியா, ஈராக், ஈரான், லிபியா, யெமன், சோமாலியா, சூடான் ஆகிய ஏழு முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த அகதிகள் மற்றும் பயணிகள் அமெரிக்காவில் நுழைய, ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தடை விதித்தார். இந்த தடையை எதிர்த்து, சியாட்டிலில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த கோர்ட், டிரம்ப் விதித்த தடைக்கு தடை விதித்தது.

இதை எதிர்த்து, அமெரிக்க அரசு, மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தது. இதை, மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு நிராகரித்தது.

ஏழு நாடுகளை சேர்ந்தவர்களை அனுமதிப்பதால், நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படும் என்பதற்கான ஆதாரங்களை, அரசு தாக்கல் செய்யவில்லை என, நீதிபதிகள் கூறினர். இதுபற்றி ஜனாதிபதி டிரம்ப் கூறுகையில், நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது, என்றார். இதனிடையே அதிபர் டிரம்பின் தடை உத்தரவுக்கு எதிராக, கலிபோர்னியா உட்பட, 16 மாகாணங்களின் தலைமை சட்டத்தரணிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

தடை உத்தரவுக்கு எதிராக, அந்தந்த மாகாணங்களில் நடைபெறும் வழக்குகளில் அவர்கள் ஆஜராகி, தங்கள் கருத்தை வலியுறுத்த உள்ளதாக அறிவித்துள்ளனர்.

100 நிறுவனங்கள் வழக்கு

ஜனாதிபதி டிரம்பின் தடை உத்தரவை எதிர்த்து, கூகுள், மைக்ரோசாப்ட், ஆப்பிள், பேஸ்புக் உள்ளிட்ட, 100 தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து, சான் பிரான்சிஸ்கோ கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளன. தடை ஆணையால், வெளிநாடுகளில் சேவையை விரிவுபடுத்த முடியவில்லை. திறமையான ஊழியர்களை ஈர்க்க முடியவில்லை. நாட்டின் நலன் கருதி தடையை நீக்க வேண்டும் என, மனுவில் கூறப்பட்டுள்ளது.

## பிரித்தானிய பாராளுமன்றத்தில் இஸ்ரேலுக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றம்



இஸ்ரவேல் முன்னெடுத்து வரும் சட்ட விரோதமான குடியேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இஸ்ரவேலினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இதுபோன்ற சகல நடத்தைகளையும் நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் கொண்டுவரப்பட்ட 2334 ஆம் இலக்க பிரேரணைக்கும் பிரித்தானிய பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பலஸ்தீன் பிரதேசத்தில் இஸ்ரேலினால் முன்னெடுக்கப்பட்டு வரும் குடியேற்றங்கள் தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது இந்த பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இஸ்ரேலின் சட்ட விரோத குடியேற்றத்துக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட 2334 ஆம் இலக்க பிரேரணைக்கு ஆதரவு வழங்கிய 14 நாடுகளில் ஐக்கிய இராஜ்ஜியமும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை



கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வட கொரியா மீண்டும் சோதனை செய்ததாக சியோல் பாதுகாப்பு அமைச்சகம் தகவல் தெரிவித்துள்ளது.

பல நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை, அணுஆயுத சோதனை உள்ளிட்டவற்றை நடத்தி வருவது தொடர்ந்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பிறகு வட கொரியா சோதனை செய்யும் முதல் ஏவுகணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

# வழி தவறி இந்தியா வந்தடைந்த சீன இராணுவ வீரர் 50 வருடங்களுக்குப் பின் சீனா திரும்பினார்



இந்தியா, சீனா இடையே 1962 இல் நடந்த போரின்போது, வழி தவறி இந்திய எல்லைக்குள் நுழைந்து கடந்த 50 ஆண்டுகளாக சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாமல் தவித்த சீன இராணுவ வீரர் அவரது குடும்பத்தினருடன் சேர்த்து வைக்கப்பட்டார்.

சீனாவின் சாங்ஸி மாகாணத்தில் உள்ள யூ னாய் நன் கன் என்ற கிராமத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் வாங் கி (77). இந்தியா, சீனா இடையே 1962 இல் நடந்த போரில் பங்கேற்றார். ஒரு கட்டத்தில் வழி தவறி இந்திய எல்லைக்குள் நுழைந்த வாங் கி கைது செய்யப்பட்டு இராணுவ சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1969 இல் சிறையில் இருந்து விடுதலையானதும் சீனாவுக்கு திரும்ப முடியாமல் மத்தியப் பிரதேச மாநிலம் பாலாகட் மாவட்டத்தில் உள்ள திரோடி கிராமத்திலேயே தங்கி விட்டார்.

மேலும் இந்தியரான சுசீலா என்ற பெண்ணையும் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு விஷ்ணு வங் (35) என்ற மகனும், நேகா என்ற மருமகளும் உள்ளனர். தவிர கனக் வங் என்ற பேத்தியும் உள்ளார். தனது குடும்பம் பெரிதானதால் சீனாவுக்கு செல்லும் முயற்சியை வங் அடியோடு கைவிட்டார்.

இந்தச் சூழலில் அவரது வாழ்க்கை பற்றிய நிகழ்ச்சியை பிபிசி தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பியது. அந்த நிகழ்ச்சி சீனாவின் சமூக வலைதளங்களிலும் வேகமாக பரவியதால் வாங் கியை திரும்ப அழைத்துக் கொள்ள சீனா நடவடிக்கை எடுத்தது. ஐ.நா.வில் ஜெயிஷ், முகமது தலைவர் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக அறிவிக்க வேண்டும், அணு விநியோக குழுவில் உறுப்பினர் பதவி என இந்தியா எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு சீனா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இதனால் இந்தியா, சீனா உறவில் சுமூகமற்ற நிலை காணப்படுகிறது.

எனினும் 50 ஆண்டுகளாக பிரிந்த தனது குடும்பத்தினருடன் வாங்கி இணைய வேண்டும் என்பதற்காக சீனாவின் நடவடிக்கைக்கு இந்தியா ஒத்துழைப்பு அளித்தது. அதன் காரணமாக தனது இந்திய குடும்பத்தினருடன் வாங் கி அண்மையில் சீனா சென்றடைந்து, அங்குள்ள குடும்பத்தினருடன் இணைந்தார். வாங் கி அவரது குடும்பத்தினருடன் இணைந்த நிகழ்வு மிகுந்த உருக்கமாக இருந்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாங் கி குடும்பத்தினருடன் சீனா சென்றுவிட்ட போதிலும் அவர் விரும்பினால் மீண்டும் இந்தியாவில் குடியேறலாம் என இந்திய மத்திய அரசு அனுமதியும் வழங்கியுள்ளது.

# உலகச் செய்திகள்

## ஈ:.பிள் கோபுரத்தை பாதுகாக்க கண்ணாடிச் சுவர்



இந்த வருடத்தின் இறுதிக்குள், சாத்தியமான பயங்கரவாத தாக்குதல்களிலிருந்து பாரிஸில் உள்ள ஈஃபில் கோபுரத்தை பாதுகாக்க, அதனைச் சுற்றி வலிமையான கண்ணாடிச் சுவர் நிறுவப்படவுள்ளது.

கடந்த யூரோ 2016 கால்பந்து போட்டி நடைபெற்றபோது நிறுவிய உலோக வேலிகளுக்கு பதிலாக இந்த இரண்டரை மீட்டர் சுவர் அமைக்கப்படும் என நகரின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நகரத்தின் மிக மதிப்பிற்குரிய இடங்கள் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாதுகாக்கப்பட வேண்டும் என சுற்றுலாத் துறையின் துணை மேயர் ஷான் ஃப்ரான்சுவா மார்த்தின் தெரிவித்துள்ளார்.

## இஸ்ரேலின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒரு சர்ச்சைக்குரிய நபரான மோசே சப்டியின் இலங்கை விஜயம் குறித்து அதிருப்திகள் எழுந்துள்ள நிலையில், இது குறித்து ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள, இலங்கை கட்டடக் கலை நிபுணர் நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷ பெர்ணான்டோ, அவரது தனிப்பட்ட சிந்தனை குறித்து நாம் ஆர்வம் காட்டவில்லை. உயர் கட்டிடங்கள் குறித்து லூகோர்புசீருக்கு பின்னர் பெரும் தாக்கத்தைக் கொண்டவராக மோசே சப்டி உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை பலஸ்தீன நட்பு கொள்கையைக் கொண்டிருக்கின்ற நிலையில், சமீப காலம் முதல் இஸ்ரேலுக்கு ஆதரவான போக்கை இலங்கை கடைபிடிக்கத் தொடங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின் ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அவுதிரேலிய அரசின் அழைப்பினை ஏற்று செல்லும் பிரதமர், ஆஸி பிரதமர் மெல்கம் ட்ரன்புல் மற்றும் அரச தரப்பு பிரதானிகளுடன் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதோடு, இருநாட்டுக்குமிடையான ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார்.

மேலும், மெல்பன் மற்றும் கென்பரா நகரங்களுக்கும் செல்லவுள்ள பிரதமர் விக்கிரசிங்க, 17 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் என்பதும் இந்த விஜயத்தில் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, ; பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மு.கா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பெற்ற மன்சூர் ஏ.காதர், சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக அங்கத்தவரான மௌலவி ஏ. சீ. ஏ. எம். புஹாரியின் சகோதரருமாவார்.

இதேநேரம் கட்சியின் பிரதிக் கொள்கை பரப்பும் செயலாளராக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவியை காலஞ்சென்ற சென்ற செனட்டர் மசூர் மௌலானா வகித்து வந்தார்.

## ஹஜ்ஜுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சேவைகளின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இலங்கையில் மூலைக் காய்ச்சல் பரவுவதை தடுப்பதற்காகவே சுகாதார அமைச்சு இத்தீர்மானத்தை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஹாஜிகள் புனித ஹஜ் கடமைகளுக்காக புறப்பட்டுச் செல்லும் போது அவர்களுக்கு மூலைக் காய்ச்சல் தடுப்பூசி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்படவுள்ளதாகவும், யாத்திரிகர்கள் அவர்களுக்கு அண்மித்த பிரதேசங்களில் மேற்படி தடுப்பூசை ஏற்றிக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று ஆபிரிக்க மற்றும் பிரேசில் போன்ற நாடுகளுக்கு பயணிப்பவர்கள் மஞ்சட்காமாலைக்கும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தவிசாளர் இன்றி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மத்தியில் நடைபெறறது.

தவிசாளர் பதவிக்கு பிரேரிக்கப்பட்ட கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.டி ஹஸனலி கலந்து கொள்ளாமலேயே பேராளர் மாநாடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தேசிய பட்டியல் பாராளுமன்ற பதவியுடன் கட்சியின் தவிசாளர் பதவியும் வழங்கப்படும் என கட்சியின் தலைமையினால் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தும் கூட ஹஸனலி நேற்றைய மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. கூட்டத்தில் கலந்து கொள்ளாதது பற்றி அவரது கருத்தை பெற்றுக்கொள்ளவதற்கு இப்பத்திரிக்கை அச்சுக்கு போகும் வரை நாம் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை.

நேற்றைய மகாநாட்டில் முந்தினம் இரவு நடைபெற்ற கட்டாய உயர்பீடக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் பெயர் அறிவிக்கபட்டது. கட்சியின் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் செயலாளராக மன்சூர் ஏ. காதரும் பொருளாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லமும் தெரிவானார்.

கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் நேற்று அறிவிக்கப்படவில்லை. 90 பேர் கொண்ட உயர்பீடத்தின் உத்தியோகத்தர் பெயர்கள் மற்றுமே நேற்று அறிவிக்கப் பட்டது.

# அரிசி விற்பனையில் மோசடியா?

### 1977இற்கு முறையிடுங்கள்

நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இன்னும் சில தினங்களில் மூவாயிரம் மெட்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசி, ச.தோ.ச வியாபார நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படும் என்று அதன் தலைவரான ரொஹான் டி அத்து கோரல கூறினார்.

மேலும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அரிசி விற்பனையில் மோசடியில் ஈடுபடுபவர்களைப் பற்றிய தகவல்களை 1977 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தர முடியும் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த இலக்கத்தினூடாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தொடர்பு கொண்டு அவிப்புச் செய்யுமாறும் இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட வியாபாரிகளை சட்டத்தின் முன்கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

## மேல்நீதிமன்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தனிப்பட்ட வகையில் சட்டத்தரணி தொழில் புரிந்து வரும் கண்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக நீதிச்சேவை சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள இராமநாதன் கண்ணன் 1997இல் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்தவர். 2004 இலும் அதற்கு பின்பு ஒரு முறையும் மஜிஸ்திரேட் பதவிக்காக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதும் அவர் தெரிவாகவில்லை. 2004ஆம் ஆண்டு மஜிஸ்திரேட் நீதிவான்களாக நியமனம் பெற்று அதில் ஆகக் கூடுதலான புள்ளியைப் பெற்ற நீதிவானாக இப்போது இருப்பது சேவை மூப்பு அடிப்படையில் 40ஆவது இடத்திலாகும். இதன்படி 2004இல் மஜிஸ்திரேட் நீதவானாக நியமனம் பெற்று இன்னும் 39பேர் நிமனத்திற்காகக் காத்திருக்கும் பட்டியலில் இருக்கும் போது அதே யாண்டில் மஜிஸ்திரேட் நீதிவானாக தகுதி பெறாத ஒருவரை மேல் நீதிமன்ற நீதவானாக நியமித்திருப்பது எவ்வளவு நியாயமானது என நீதிச் சேவை சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் சேவை புரிவதற்காக தமிழ் மொழி பேசக்கூடிய மேல் நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிக்கும் தேவையின்படி இந்த நியமனத்தை மேற்கொண்டதாக சிலர் வாதிடலாம். அது அர்த்தமற்ற வாதமாகும். 2016 ஆம் ஆண்டு சட்டமா அதிபரும் பிரதம நீதியரசரும் மேல் நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு சிபாரிசு செய்த சிங்கள, தமிழ், மற்றும் அங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த பரிச்சயமுள்ள, தற்போது வவுனியாவின் மாவட்ட நீதவானாக பணி புரியும் எல். ஏ. மனாபினை மேல் நீதிமன்ற நீதியரசராக நியமிக்காது இந்த நியமனத்தைச் செய்திருப்பது தவறாகும் என்றும் நீதிச்சேவை சங்கச் செயலாளரும் கல்கிசை மஜிஸ்திரேட் நீதிவானுமாகிய எம்.எம்.எம். மிஹால் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நியமனம் நீதித்துறையின் சுதந்திரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதனால் இந்த நியமனத்தை மீள்பரிசீலனை செய்யுமாறும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.இதேநேரம் இந்த நியமனம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் சட்டமா அதிபரின் அங்கீகாரத்துடன் நீதிச்சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் பிரதம நீதியரசரின் அங்கீகாரம் மற்றும் சிபாரிசுடன் செய்யப்பட்டிருப்பதாக சுகபே7 அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிச்சேவைக்கு வெளியாக மேல் மற்றும் உயர் நீதிமன்றத்திற்கு நீதியரசர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எமது தகவலின்படி அண்மைக்காலத்தில் மார்க் பெர்னாண்டோ, சிரானி பண்டார நாயக்க, கலாநிதி. ஏ.ஆர்.பி. அமரசிங்க, கலாநிதி. ரஞ்சித் தீரத்ன, பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன, சுரேஷ் சந்திரன், உபாலி இசட் குணவர்தன போன்றோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான நியமனங்களிலும் சட்டத்தரணிகளது சங்கம் அல்லது பிரதம நீதியரசர்களது அனுமதி பெறப்பட்டோ, பெறப்படாமலோ மேற்கொள்ளப்பட்டதாக குற்றச் சாட்டுக்கள் எழுப்பப்பட்டுள்ளன என்றும் கபே சார்பில் அதன் பணிப்பாளர் ராஜித் கீர்த்தி தென்னகோன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 29 இலட்சம் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்பு

29 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஒருதொகை போலி நாணயத்தாள்களுடன் சந்தேகநபர் ஒருவர் ஹொரன பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹொரன பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி, மொரகஹஹேன - கொடிகன்கொட பகுதியில் வைத்தே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபர் வசமிருந்து அச்சிடப்பட்ட போலி நாணயத்தாள்கள் பல கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்படி, 5000 ரூபா நாணத்தாள்கள் 106, 1000 ரூபா நாணயத்தாள்கள் 1830 மற்றும் 500 ரூபா நாணயத்தாள்கள் 1079 ஆகியனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், குறித்த நாணயங்களை அச்சிட பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கனணி, ஸ்கேனர் உள்ளிட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சந்தேகநபர் வெல்லம்பிடிய - பொகுனுவிட பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இவரை ஹொரன நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தவிசாளர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஹஸன் அலி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதுவரை பசீர் சேகுதாவூத் வகித்த தவிசாளர் பதவியை ஏற்குமாறு உயர்பீட உறுப்பினர்கள் பலரும் ஹஸன் அலியை வலியுறுத்திய போதும் அவர் அதனை ஏற்க மறுத்துள்ளார்.

தான் எப்போதும் கட்சிக்கு விசுவாசமாக இருக்கப் போவதாகவும் தனக்கு எவ்வித பதவிகளும் இனித் தேவையில்லை என்றும் கூறிவிட்டு கூட்டத்தின் இறுதிக்கட்டத்தில் ஹஸன் அலி அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

வெளியேறுவதற்கு முன் ஹஸன் அலி தலைவருடன் முஸாபஹாச் செய்து நெற்றியில் முத்தமிட்டே வெளியேறியுள்ளார்.

உயர் பீடக் கூட்டம் முடிந்த பின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் சூறா சபையின் தலைவர் மௌலவி கலீல் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கல்கிசையிலுள்ள ஹஸன் அலியும் வீட்டுக்குச் சென்று தவிசாளர் பதவியை ஏற்குமாறு வற்புறுத்தியுள்ளனர். தவிசாளர் பதவியுடன் ஏற்கனவே அறிவித்தபடி பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் வழங்குவதாக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற பேராளர் மாநாட்டுக்கு வருவதாக ஹஸன் அலி தெரிவித்திருந்த போதும் அவர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

## தம்புள்ளையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,கடந்த புதன்கிழமை தம்புள்ளையில் நடந்த 'பேகர்பன்7 விவகாரத்தின் போது தம்புள்ளை பொலிஸின் அசிரத்தையால் முஸ்லிம்களின் கடைகள் மூடப்பட ஏற்பட்டதோடு, வியாழன் அன்று சிங்கள இளைஞர்கள் ஊர்வலம் போகவும் வழி வகுக்கப்பட்டது. முஸ்லிம்ளுக்கு எதிரான இந்த ஊர்வலம் தடை செய்யப்படவுமில்லை. இதனால் தம்புள்ளை வியாபாரிகளுக்கு பதற்றம் ஏற்பட்டது. பேகர்பன் உணவகத்தில் நடந்த சம்பவத்தின் போது சுமார் 25 சிங்கள இளைஞர்கள் தனி ஒருவருக்கு தாக்குதல் செய்யும் போது சட்டம் அமுலாக்கும் பொலிஸார் இருந்தும் தடுக்கவே போகவில்லை.

முஸ்லிம் ஒருவர் செய்த வேலையை நமக்கு அனுமதிக்க முடியாது. அது நூற்றுக்கு இருநூறு பிழை. தவறிழைத்தால் இரு சாராரையும் கைது செய்ய வேண்டும். குண்டர்கள் பற்றிய சீ.சீ.ரீ.வி காணொளி உள்ளது. இதன்படி சட்டம் செயற்பட்டால் எல்லாம் சுமுகமாக முடிந்திருக்கும். குண்டர்கள் கப்பம் எடுத்துள்ளனர். கடைகளை மூடும்படி அச்சுறுத்தியுள்ளனர். சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கடைகளில் முஸ்லிம்கள் வியாபாரம் செய்தாலும் ஒரு சில கடைகளே முஸ்லிம்களுக்குச் சொந்தம். மற்றவை கூலிக்கடைகள். கூலிக்கடைகளை எம்மிடமிருந்து அகற்ற கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் கடைச்

சொந்தக்காரர்கள் அதற்கு உடன்பாடில்லை. காரணம், நாம் வழங்கும் அதிக கூலி. மற்றும் மற்றவர்கள் மீது நம்பிக்கை இல்லாமை என்பனவேயாகும்.

அத்தோடு, தம்புள்ளை முஸ்லிம் வியாபாரிகள் மத்தியில் ஒற்றுமை இல்லாததும் ஒரு பெரிய குறையாக உள்ளது. சம்பவம் நடந்த மாலையே நூற்றுக்கு எண்பது வீதமானோர் கடைகளை மூடிவிட்டு போய்விட்டனர். வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் போது இதன் பிரதிபலிப்பு தென்பட்டது.

குறிப்பிட்ட சிலரே எல்லா விடயங்களையும் செய்ய வேண்டியுள்ளது. நடந்த சம்பவத்தின் பின் நாம் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். முதற்கட்டமாக எமது முஸ்லிம்கள் கடைகளில் வேலை செய்யும் சிப்பந்திகளை பள்ளிவாசல் மூலமாக வரவழைப்பதோடு, பாவனையாளர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தாறுமாறாக நடக்கும் சிப்பந்திகளை விலக்கவும் கடைமுதலாளிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றும் தெரிவித்தார்.

## மீள்குடியேற்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி இத்தீர்மானத்தை எடுத்துள்ளார். வாராந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் ஹக்கீம் தனக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்போது இதுதொடர்பாக அமைச்சர் றிஷாத் பதியுதீன் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். இதனையடுத்து இருவரும் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

இந்தச் செயலணியில் அமைச்சர்களான றிஷாத் பதியுதீன், டி.எம்.சுவாமிநாதன், பைஸர் முஸ்தபா, துமிந்த திசாநாயக்க ஆகியோர் பணிபுரிந்தனர்.

இவர்களுக்கு மேலதிகமாக தனக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டியை பிரதிநிதித்துவப்படுத்தும் இவருக்கு ஏன் இந்த பிரதிநிதித்துவம் என்று றிஷாத் வாதாடியுள்ளார்.

நீர்வழங்கள் அமைச்சின் நிதியைப் பயன்படுத்தி முஸ்லிம் காங்கிரஸ் வேலைகள் நடைபெறுவதாகவும் றிஷாத் சுட்டிக்காட்டியுள்ளார். இருவரும் தனிப்பட்ட வகையில் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை எழுப்பியுள்ளனர். இருவரையும் ஜனாதிபதி ஆறுதல்படுத்தியுள்ளதோடு, இதன் பின் செயலணிக் கூட்டம் தனது தலைமையிலே நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

## தலைமைத்துவம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது;

நான் மீண்டும் தலைவராக வர வேண்டும் என்று ஹஸன் அலிதான் எனது பெயரை பிரேரித்தார். அவருடைய அந்த நல்ல மனதுக்கு நான் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். பாமர மக்களிடமிருந்து அரசியல் அந்தஸ்தை வழங்குகின்ற கட்சி என்றால் அது முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே.

பேராளர் மாநாட்டில் பல குழப்பங்கள் நடைபெறும் என்று வெளியிலிருந்து பலர் தம்பட்டமடித்துக்கொண்டிருக்கும் நிலையில், கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று நேரகாலத்துடன் பேராளர்கள் இங்கு அணிதிரண்டு வந்து எமக்கு ஆதரவுக்குரல் வழங்கியுள்ளனர்.

கட்சிக்கு பிரச்சினை வருகின்றபோது அதைக் காப்பாற்றுவது தலைமை அல்ல, போராளிகளே.

கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகை வெளியில் பூதாகரமாக்குவதற்கு நாங்கள் தீனிபோட வேண்டிய அவசியமில்லை. அன்று கட்சிக்குள் இருந்துகொண்டு குழிபறித்தவர்கள் இன்று வெளியில் இருந்துகொண்டு குழிபறிக்கின்றனர்.

திருகோணமலைக்கு வழங்கப்பட்டுள்ள தேசியப்பட்டியலை பங்கிடு செய்வதற்கு நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். தற்போது பாரிய பிரச்சினையாக எழுந்துள்ள தேசியப் பட்டியல் விவகாரத்துக்கு தாமதிக்காமல் விரைவில் தீர்மானம் எடுக்கவுள்ளோம். எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள் பொறுமையுடன் இருக்கவேண்டும். அவர்களுடைய எதிர்பார்ப்புகளில் ஒருபோதும் மண்ணை அள்ளிப் போடமாட்டோம்.

தேசியப்பட்டியல் விடயத்தில் சரியான நேரத்தில் எடுக்கின்ற சரியான முடிவாக அது இருக்கவேண்டும். இதன்போது கட்சிப் பாதுகாப்பு கவனத்திற்கொள்ளப்படுவது மிக முக்கியமானது. கட்சிகள் குழறுபடிகள் ஏற்படாத வகையில் தேசியப்பட்டியல் பகிரப்படவேண்டும்.

தாருஸ்ஸலாமில் இரகசியங்கள் இருப்பதாக களவாக புத்தகம் அடித்து வீட்டுக்கு வீடு பங்கிடுகின்றனர். அதில் சமர்ப்பணம் செய்யப்பட்டவர்களின் பெயர்களைப் பார்க்கும்போதே அதை யார் வெளியிட்டார்கள் என்பதை அவர்களாகவே காட்டிக்கொடுத்து விடுகிறார்கள்.

தாருஸ்ஸலாமில் எந்த இரகசியங்களும் இல்லை. அவை எல்லோருக்கும் தெரிந்த பரம இரகசியமே.

தாருஸ்ஸலாமை நாங்கள் புதையல் அடைகாப்பதுபோல அவர்கள் பேசிக்கொண்டு திரிகின்றனர். இங்குள்ள கட்டிடங்கள் கூட மிகவும் பழமையடைந்துவிட்டனர். அவற்றுக்குப் பதிலாக நாங்கள் தற்போது புதிய கட்டிடங்களை கட்டுவதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

அஷ்ரப் ஆரம்பித்த நம்பிக்கை நிதியத்தை மீண்டும் கூட்டவேண்டும். அதில் நானும், சகோதரர் ஹாபிஸ் நஸீரும், சல்மானும் மாத்திரமே தற்போது இருக்கிறோம்.

தாருஸ்ஸலாம் விவகாரம் தொடர்பில் கலீல் மௌலவி பேரியல் அஷ்ரபுடன் பேசியிருக்கிறார். இந்த விவகாரத்துக்கு நாங்கள் விரைவில் தீர்வினை வழங்குவோம். இதற்காக நாங்கள் யாப்பில் திருத்தங்களையும் மேற்கொள்ளவுள்ளோம். அம்பாறையிலும் ஒரு தாருஸ்ஸலாம் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதையும் நாங்கள் கட்டித் தருவோம்.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும்போது சிறுபான்மைக் கட்சிகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

எல்லை நிர்ணயக் குழுவுக்கும் அமைச்சருக்கும் இடையில் அடிக்கடி சண்டைகள் நடக்கின்றன. அதுபோல, தேர்தல் முறையை கொண்டு வருவதற்காக அரசு உள்ளூராட்சி தேர்தலை இழுத்தடித்துக்கொண்டிருக்கிறது. இத்தேர்தல் உரிய நேரத்தில், உரிய முறையில் தற்போது நடைமுறையிலுள்ள முறையில் நடாத்தப்படவேண்டும்.

### யாப்புத் திருத்தம்

வேறு கட்சியில் இருக்கும் ஒருவருக்கு, குறிப்பிட்ட காரணங்களுக்காக அந்தக் கட்சிக்கு பாதகமில்லாத வகையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் அங்கத்துவம் வழங்கக்கூடிய அதிகாரம்.

மஜ்லிஷ் ஷூரா கூட்டங்களுக்கான நிதியை கட்சி உயர்பீடத்தின் அங்கீகாரத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

கட்சியின் பதவிவழி உறுப்பினர்கள் இவ்வாறு அழைக்கப்படுவர். செயலாளர் நாயகம் என்ற பதவி தற்போது செயலாளர் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்போது ஒரு செயலாளர் மாத்திரமே பதவியில் இருப்பார். அதுபோல பொது பொருளாளர் என்ற பதவி பொருளாளர் என மாற்றப்பட்டுள்ளது.

உச்சபீடத்துக்கு தலைவரினால் சேர்த்துக்கொள்ளப்படும் 51 பேரில் தேவையானால் பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் இதற்குள் உள்வாங்க முடியும்.

இறுதியாக நடைபெறும் கட்டாய உச்சபீடக் கூட்டத்தில் செயலாளர் தெரிவை தலைவர் மேற்கொள்வார். கட்சியின் தலைவர் செயலாளர் பதவிக்கான ஒருவரை 12 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு நியமிக்கலாம். அதேவேளை, செயலாளரை நீக்கும் அதிகாரம் உச்சபீடத்துக்கு மாத்திரமே இருக்கும்.

கட்சியின் செயலாளர் உச்சபீடத்தின் செயலாளராகவும் பணியாற்றுவார்.

செயலாளராக நியமிக்கப்படுபவர் பாராளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி சபை உள்ளிட்ட அரசியல் அதிகாரமுள்ள பதவிக்கு போட்டியிட முடியாது. தேவையானால், அவருடைய பதவியை விட்டு விலகி அதில் போட்டியிட முடியும்.

உயர்பீடத்துக்கு தொடராக 3 கூட்டங்களுக்கு வருகைதராதபோது உறுப்பினர் பதவி வெறிதாகும். காரணங்கள் இருந்தால் மேன்முறையீடு செய்து மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

உச்சபீடக் கூட்டத்திலுள்ளவர்களில் 2/3 பங்கினர் எழுத்துமூலம் கோருவதன் மூலம் விசேட உச்சபீடக் கூட்டத்தினை கூட்டமுடியும்.

தலைவருடன் சேர்ந்து செயலாளர் அல்லது தவிசாளர் சேர்ந்து அவசர உச்சபீடக் கூட்டத்தினை கூட்டும் அதிகாரம் இருக்கிறது. தலைவரின் அனுமதியின்றி யாரும் உச்சபீடக் கூட்டத்தினை நடாத்த முடியாது.

கட்சித் தலைவரின் எழுத்துமூலமான உத்தரவின் பிரகாரம் வருடாந்த பேராளர் மாநாட்டையும், விசேட பேராளர் மாநாட்டையும், கட்டாய உச்சபீடக் கூட்டத்துக்கும் அழைப்பு விடுக்கமுடியும்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# மட்டக்களப்பில் சகல வசதிகளையும் கொண்ட கிரிக்கெட் பயிற்சி நிலையம் அமைக்கப்படும்!

## திலங்க சுமதிபால



(அஸ்லம் எஸ்.மௌலானா/ யூ.கே காலித்தீன்)

கிழக்கு மாகாணத்திலுள்ள கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை மேம்படுத்தும் பொருட்டு மட்டக்களப்பில் அனைத்து வசதிகளையும் கொண்ட கிரிக்கெட் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிரிக்கெட் சபைத் தலைவரும் பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை அம்பாறை மாவட்ட கரையோர பிராந்திய கிரிக்கெட் விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸின் வேண்டுகோளின் பேரில் திலங்க சுமதிபால கல்முனைக்கு விஜயம் செய்து, இக்கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தார். இதில் அம்பாறை மாவட்ட கரையோர பிராந்தியத்தை சேர்ந்த 48 கிரிக்கெட் கழகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கடின பந்து கிரிக்கெட் வீரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் குறித்து திலங்க சுமதிபாலவிடம் எடுத்துரைக்கப்பட்டதுடன் அம்பாறை மாவட்டத்தில் கரையோர பிராந்தியத்திற்கென பிரத்தியேகமாக கிரிக்கெட் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இவற்றை செவிமடுத்த கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபால பதிலளித்து உரையாற்றுகையில்,இங்கு முன் வைக்கப்பட்ட பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பில், தான் சாதகமாக பரிசீலித்து, முடியுமான நடவடிக்கைகளை எடுத்து, இப்பிரதேசத்தில் கிரிக்கெட் விளையாட்டு முன்னேற்றம் அடைவதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவேன்.

பொதுவாக பாடசாலை மற்றும் கழக மட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் எம்மால் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தும்போது இங்கு சொல்லப்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும்.

அதேவேளை கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களினதும் மத்திய இடமான மட்டக்களப்பில் கிரிக்கெட் பயிற்சி நிலையத்தை 20 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வில் கழகங்களின் பிரதிநிதிகளினால் திலங்க சுமதிபால, நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.



சாய்ந்தமருது டஸ்கர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் புதிய சீருடை அறிமுகப்போட்டி நேற்று சாய்ந்தமருது பிளைங்ஹோர்ஸஸ் அணிக்கெதிராக இடம்பெற்றது, இப்போட்டியில் பிளைங்ஹோர்ஸஸ் அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது,இப்போட்டியிலும் சிறப்பாக சகலதுறைகளிலும் பிரகாசித்தார்.அணியின் தலைவர் ஏ.என். எம்.ஆபாக், இவர் 25 பந்துகளை சந்தித்து அரைச்சதம் கடந்து 52 ஓட்டங்களையும், பந்து வீச்சில் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். (எம்.எஸ்.எம் ஸாகிர்/எம்.றின்சாத்)



# ஐ.பி.எல். ஏலத்தில் 5 ஆப்கான் வீரர்கள்

10ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 5-ந் தேதி முதல் மே 21ஆம் திகதிவரை நடக்கிறது. இந்தப் போட்டிக்கான வீரர்கள் ஏலம் வருகிற 20-ந்தேதி பெங்களூரில் நடக்கிறது. ஐ.பி.எல். ஏலத்தில் 750-க்கும் மேற்பட்ட வீரர்கள் பதிவு செய்துள்ளனர். 8 அணிகளிலும் சேர்த்து மொத்தம் 79 வீரர்களை ஏலத்தில் எடுக்கிறார்கள்.

ஐ.பி.எல். ஏலப்பட்டியலில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 5 வீரர்கள் இடம் பெற்று உள்ளனர். முகமது சஷாத், முகமது நபி, ரஷீத்கான், தவ்லத் சர்தான், நஜீப்சர்தான் ஆகியோர் இடம் பெற்று உள்ளனர்.இதில் விக்கெட்கீப்பாளரான முகமது சஷாத் சிறந்த அதிடி துடுப்பாட்ட வீரர் ஆவார். அவர் டி20 உலகக்கிண்ணத்தில் 222 ஓட்டங்களை எடுத்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக 19 பந்தில் 44 ஓட்டங்களை எடுத்தார். இதனால் அவர் ஏலத்தில் விலை போவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றன. இதேபோல் இடது கை வேகப்பந்து வீரரான தவ்லத் சர்தானும் ஏலத்தில் விலை போவார் என்று கருதப்படுகிறது.

ஐ.பி.எல். ஏலப்பட்டியலில் ஸ்டோக்ஸ், மார்கன், வோக்ஸ், இஷாந்த் சர்மா, குட்மின்ங் மெத்யூஸ், மிச்சேல் ஜோன்சன் போன்ற வீரர்களுக்கு அதிகபட்சமாக ரூ.2 கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மகளிர் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள்;

# சிம்பாப்வேயை வீழ்த்திய இலங்கை சுப்பர் 6 சுற்றுக்கு தகுதிபெறுமா?



பீ.எப்.எம் றிஷாட்

கொழும்பில் நடைபெற்றுவரும் பத்து நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கை மகளிர் அணி தனது 2ஆவது வெற்றியை பதிவு செய்து சுப்பர் 6 சுற்றில் விளையாடுவதற்கான வாய்ப்பை தக்கவைத்துக்கொண்டது.இலங்கை மற்றும் சிம்பாப்வே மகளிர் அணிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், சிம்பாப்வே அணியினை 8 விக்கெட்டுக்களால் இலங்கை மகளிர் அணி வீழ்த்தி, இத்தொடரில் இரண்டாவது தொடர்ச்சியான வெற்றியினை சுவைத்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணித் தலைவி சார்ன் மேயர்ஸ், முதலில் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்தார்.

இதன்படி களமிறங்கிய சிம்பாப்வே மகளிர் அணி, சில விக்கெட்டுகளை சீரான ஓட்ட இடைவெளிகளில் பறிகொடுத்தவாறு ஓட்டங்களை மந்த கதியில் சேர்க்க ஆரம்பித்தது. இவ்வாறான நிலையில் அவ்வணி 93 ஓட்டங்களினைப் பெற்றிருந்த வேளையில் தனது 5ஆவது விக்கெட்டினை இலங்கை அணித் தலைவி இனோக்கா ரணவீரவின் சுழல் பந்து வீச்சில் பறிகொடுத்தது.

அதனையடுத்து மள மளவென இலங்கை பந்து வீச்சாளர்கள் ஜிம்பாப்வே அணியின் ஏனைய விக்கெட்டுகளை வீழ்த்த, மேலதிக 56 ஓட்டங்களிற்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஜிம்பாப்வே அணி, 50 ஓவர்களில் 149 ஓட்டங்களினை மாத்திரமே பெற்றுக்கொண்டது.இலங்கை சார்பான பந்து வீச்சில், அணித் தலைவி இனோக்கா ரணவீர தனது நட்சத்திர சுழல் மூலம் வெறும் 18 ஓட்டங்களிற்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின்னர், இலகு வெற்றி இலக்கான 150 ஓட்டங்களினை 50 ஓவர்களில் பெறுவதற்காக ஆடுகளம் நோக்கி விரைந்த இலங்கை மங்கைகள் வெறும் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 36.5 ஓவர்களில் 153 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை தொட்டனர்.இலங்கை மகளிர் அணி சார்பாக ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனை சமரி அத்தபத்து அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்களினை பெற்று தனது பத்தாவது ஒருநாள் அரைச்சதத்தினை பதிவு செய்து கொண்டார்.இலங்கை அணிக்கு பந்து வீச்சில் சற்று சவாலாக காணப்பட்டிருந்த ஜிம்பாப்வே அணியின் லோரென் ட்சுமா இன்று பறிபோன இலங்கை அணியின் இரண்டு விக்கெட்டுக்களையும் சாய்த்திருந்தார். இப்போட்டியின், ஆட்ட நாயகியாக தனது சிறப்பான பந்து வீச்சிற்காக இனோக்கா ரணவீர தெரிவு செய்யப்பட்டார்.இத்தொடரில், இலங்கை மகளிர் அணி தனது இறுதி குழு நிலை ஆட்டப் போட்டியில் தாய்லாந்து மகளிர் அணியினை இன்று எதிர்கொள்கின்றது.இப்போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றால் சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதியைப் பெற்றுக்கொள்ளும்.இந்நிலையில் இலங்கை மற்றும் தாய்லாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி இன்று எம்.சி.ஏ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சூதாட்ட சர்ச்சையில் ஈடுபட்ட பாக். வீரர்கள் இடைநீக்கம்



டுபாயில் கடந்த வியாழக்கிமை ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 தொடரில் நடப்புச் சம்பியனான இஸ்லாமாபாத் யுனைடெட் அணிக்காக விளையாடுகின்ற மூன்று பாகிஸ்தான் வீரர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டு, தாயகம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.காலித் லத்தீப், சர்ஜீல் கான் மற்றும் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் இர்பான் ஆகிய மூன்று வீரர்கள் மீதும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்ததையடுத்தே மூவரும் இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவ் விவகாரம் குறித்து விசாரணை நடப்பதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியுள்ளது.இதன்படி குறித்த வீரர்களிடம் நேற்றுமுன்தினம் விசாரணைகள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இருவரும் கடந்த வருடம் நடைபெற்ற டி20 உலகக்கிண்ணத்தில் பாகிஸ்தான் அணிக்காக விளையாடியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த போட்டியில் பெஷாவர் சல்மி அணியை இஸ்லாமாபாத் அணி வீழ்த்தியிருந்தாலும்,சர்ஜீல் கானுக்கு 2 மில்லியன் ரூபா பணத்தை சூதாட்ட முகவரால் வழங்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. மேலும் சர்ஜீல் மாத்திரம் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி 4 பந்துகளுக்கு மாத்திரம் முகங்கொடுத்து ஒரு ஓட்டத்தைப் பெற்று எல்பியு டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.ஆனால் காலித் லதீப் இப்போட்டியில் விளையாடவில்லை. ஆனால் பாகிஸ்தான் அணியின் மற்றுமொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான நசீர் ஜம்ஷீத், கடந்த 8ஆம் திகதி வட்ஸ்அப் மூலமாக இஸ்லாமாபாத் யுனைடெட்டின் காலித் லத்தீப்புக்கு குறுந்தகவலொன்றை அனுப்பி யூசாப் என்ற தரகரை சந்திக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இந்நிலையில், அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் பிரகாசித்துவரும் சுல்பிகர் பாபர் மற்றும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சஷைப் ஹஸன் ஆகியோரிடமும் விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

# இராஜினாமாக் கடிதத்தை வாபஸ் பெற்றார் சனத்



பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவில் தலைவர் பதவியில் இருந்து, சனத் ஜயசூரிய, இராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.அவர் தனது இராஜினாமா கடிதத்தை, இலங்கை கிரிக்கெட் சபையிடம் கொடுத்துள்ளதாகவும், தென்னாபிரிக்காவில் இருந்து நாடு திரும்பியதும் இதுதொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

இந்நிலையில், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபாலவுக்கும், சனத் ஜயசூரியாவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதையடுத்து, தனது இராஜினாமாக் கடிதத்தை சனத் உள்ளிட்ட தெரிவுக் குழுவினர் வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இங்கிலாந்து லயன்ஸ் கழகத்துடனான போட்டித் தொடரில் இலங்கை ஏ அணி வீரர்களைத் தெரிவு செய்வதில் தொடர்ந்து தலையீடுகளை மேற்கொண்டும், வீரர்களை நீக்கியும் வருவதாக தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜயசூரிய கடந்த சில தினங்களுக்கு முன் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்ததுடன், இதன்காரணமாக தான் உள்ளிட்ட தெரிவுக்குழுவினர் தென்னாபிரிக்க தொடரின் பிறகு இராஜினாமாச் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இது தொடர்பில் இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவிடம் கேட்டபோது, இவ்வாறான தகவல் தனக்கு கிடைக்கவில்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதலிடத்தில் தாஹிர் !



இலங்கை அணிக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அபாரமாக பந்து வீசிய தென்னாபிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹிர் ஐ.சி.சி.யின் ஒருநாள் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதலாவது இடத்தை பிடித்துள்ளார்.

ஐந்து போட்டிகளிலும் முறையே 3,2,2,2,1 என்ற கணக்கில் மொத்தம் 10 விக்கெட்டுகளை சாய்த்த தாஹிர், 761 புள்ளிகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளார்.இவரை தொடர்ந்து, நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ட்ரென்ட் போல்ட் 757 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், மேற்கிந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன், 711 புள்ளிகளுடன 3ஆவது இடத்திலும் உள்ளனர். அத்துடன் உலக டி20 போட்டிகளிலும் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இம்ரான் தாஹிர் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்க வீரர் டுபிளெசிஸ் முதற்தடவையாக 4ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் வெற்றிக்கொண்டதன் மூலம், தென்னாபிரிக்க அணி இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் ஐ.சி.சி ஒருநாள் கிரிக்கெட் தர வரிசையில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது. அதேவேளை தொடர்ச்சியாக ஒரு நாள் போட்டியில் 14 வெற்றிகளை பதிவு செய்த பெருமையையும் தன்வசப்படுத்தியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வெளியான புதிய ஐ.சி.சி ஒருநாள் கிரிக்கெட் தர வரிசை பட்டியலில், தென்னாபிரிக்க அணி, 119 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், அவுஸ்திரேலிய அணி 18 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், நியூசிலாந்து 113 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.98 புள்ளிகளுடன் இலங்கை 6ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று வலயத்திற்குட்பட்ட அல்-அர்ஹம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் கடந்த வாரம் அல்-அர்ஹம் வித்தியாலய கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. அட்டாளைச்சேனை அல்-அர்ஹம் வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் ஜெஸ்மீன் (மஞ்சள்) இல்லம் அதிகூடுதலான புள்ளிகளைப் பெற்று சம்பியனாக தெரிவாகியதுடன், லோட்டஸ் இல்லம் 410 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தினையும், ஓர்கிட் இல்லம் 337புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டது.பாடசாலை அதிபர் ஏ.எம் இத்ரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம் நசீர் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் எம்.எஸ் உதுமாலெப்பை கௌரவ அதிதியாகவும், வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம் காசிம் விசேட அதிதியாகவும், அதிதிகளாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களான அஷ்ஷேஹ் ஏ.எம். றகுமத்துல்லா மற்றும் ஏ.ஜீ பஸ்மில், அட்டாளைச்சேனை கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.இதன்போது வெற்றியீட்டிய இல்லங்களுக்கும், வீரர்களுக்கும் அதிதிகளினால் ஞாபகச்சின்னங்கள், பரிசுகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பெருந்திரளான பொது மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (றியாஸ் ஆதம்)

# கோஹ்லி 200!



நடைபெற்றுவரும் பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில், இரட்டைச்சதம் அடித்ததன் மூலம், இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ந்து 4 தொடர்களில் இரட்டைச் சதம் அடித்த ஒரே வீரர் என்ற வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்னதாக, கோஹ்லி, மேற்கிந்திய தீவுகள், நியூசிலாந்து, இங்கிலாந்து அணிக்கெதிராக இரட்டைச் சதங்களைப் பெற்றுக்கொண்டார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 13TH FEBRUARY 2017